# நமது ஈழநாடு

www.namathueelanadu.com

குரல் 04 மலர் 46 ஏப்ரல் 2024 மின்னஞ்சல்: contact@namathueelanadu.com இணையம்: www.namathueelanadu.com







Simply Scan the QR code Your Phone Camera

Download the NamathuEelanadu app


*நாம் தமிழீழப் பெண் சமூகத்தின் மத்தியில் ஒரு பெரிய புரட்சியை நிகழ்த்தியிருக்கின்றோம். தமிழர் வரலாற்றிலேயே நடைபெறாத புரட்சி ஒன்று தமிழீழத்தில் நடைபெற்றிருக்கின்றது.*

- தமிழீழ தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரன்

# தமிழ்ப் பொது வேட்பாளர் ?



# அன்னை பூபதி; விடுதலைப் புலிகளை நேசித்த ஈழ அன்னையர்களின் குறியீடு





தீபச்செல்வன்

எல்லா உயிரினங்களிலும் தாய் மகத்தான சக்தியாக மாபெரும் உன்னதமாக கருதப்படுகிறாள். பிராணிகளில்கூட தாய்மையின் மகத்துவத்துவம் உணர்த்தும் காட்சிகளை டிஜிட்டல் யுகத்தில் பார்க்கிறோம். அன்னை இந்தப் பிபஞ்சத்தையும் வாழ்வையும் உருவாக்குபவள். ஈழ விடுதலைப் போராட்டக் களத்திலும் அன்னையர்கள் மகத்தான சக்தியாகவே கருதப்படுகின்றனர்.

தமிழ் ஈழ விடுதலைப் போராட்டத்தில் ஈரமான அன்னையர்களும் உண்டு, வீரமான அன்னையர்களும் உண்டு. அவர்கள் எல்லா வகையிலும் ஈழ விடுதலைப் போராட்டத்தை தாங்கியிருந்தார்கள். ஈழ மண்ணையும் ஈழ விடுதலையையும் நேசித்த போராளிகளை தங்கள் உயிரிலும் மேலான உத்தமப் பிள்ளைகளாக நேசித்து அன்பு பாராட்டினார்கள். விடுதலைப் போராட்ட காலத்தில் போராளிகளுக்கு உணவைக் கொடுத்து அன்பையும் கரிசனையையும் செலுத்திய பல அன்னையர்களை பார்த்திருக்கிறோம். ஈழ நிலத்தின் எங்கோ ஒரு இடத்தில் ஒரு போராளியின் தாய் இருக்கும் போது எங்கோ ஒரு நிலத்தில் இருக்கும் இன்னொரு தாய், அந்தப் போராளிக்கு பெற்ற அன்னைபோல் அளித்த அன்பும் ஆறுதலும் அடைக்கலமும் ஈழ விடுதலையின் உன்னத பக்கங்களாகும்.

போராளிகள் தங்கள் வீடுகளுக்கு வந்திருக்கும் போது இராணுவமும் அங்கே போராளிகளைத் தேடி வர, அதனை வீரமாகச் சமாளித்து பல போராளிகளைக் காப்பாற்றிய அன்னையர்களின் தேசம் இது. இன்றைக்கு ஈழ நிலத்தில் அன்னையர்கள் நடாத்துகின்ற போராட்டத்திற்கு பெரு அர்த்தம் இருக்கிறது. அவர்கள்தான் நீதிக்கும் விடுதலைக்குமான போராட்டத்தை நடாத்திக்கொண்டிருக்கிறார்கள். தமிழ் ஈழ விடுதலைக்காக அன்றைக்கு இளைஞர்களும் யுவதிகளும் ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்ட வேளையில், அன்னைபூபதி அவர்கள் தியாக வழியில், அகிம்சைப் பாதையில் ஈழ விடுதலைக்கு ஆதரவாக தன் போராட்டத்தை முன்னெடுத்துள்ளார். ஈழப் போராளிகளுக்காக ஒரு அன்னையாக ஈழ அன்னையர்களின் குறியீடாக அவர் முன்னெடுத்த போராட்டம், ஈழ விடுதலையின் அன்னையர்களின் பங்களிப்பையும் அதன் விரிந்த பக்கங்களையும் காலத்தின் முன் நிறுத்துகிறது.


அன்னையர்கள் கண்ணீர் சிந்தும் ஒரு நாடு எத்தகைய நீதியில் இருக்கிறது என்பதையே வெளிப்படுத்துகிறது. கிளிநொச்சியிலும் வவுனியாவிலும் அன்னையர்கள் காணாமல் ஆக்கப்பட்ட பிள்ளைகளுக்காக போராடிக் கொண்டிருக்கின்றனர். தெருவில் வீழ்ந்து புரண்டழும் இந்த தாய்மாரைப் பார்த்தும் இலங்கை அரசும் உலகமும் நீதியை வழங்காமல் மௌனித்து அநீதி காக்கிறது.அன்னையர்களின் கண்ணீருக்கு பதில் அளிக்காதிருக்கும் மனிதாபிமானமற்ற கொடிய முகத்தையே நாம் உணரவேண்டியுள்ளது. ஈழத்து அன்னையர்களின் வாழ்வு துயரத்தில் தோய்ந்தது. இன்றைக்கு ஈழமெங்கும் அன்னையர்கள் தவித்து வாழும் ஒரு வாழ்நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். காணாமல் ஆக்கப்பட்ட பிள்ளைகளுக்காக, அவர்களின் விடுதலைக்காக, நீதிக்காக ஈழத்தில் அன்னையர்கள் தெருவில் வாழும் ஒரு போராட்டத்திற்கு நிர்பந்திக்கப்பட்டுள்ளனர்.

அன்னையர்கள் தலைமுறைகளால் பூமியை உருவாக்கியவர்கள். தங்கள் மாசற்ற தாய்மையால் எல்லோராலும் நேசிக்கப்படுபவர்கள். அன்னையர்கள் தவித்து வாழும் தேசங்களில் வடக்கு கிழக்கு தமிழ் தேசமும் ஒன்று. ஈழம் முழுக்க முழுக்க அன்னையர்களின் தவிப்பாலும் கண்ணீராலும் ஏக்கத்தாலும் காத்திருப்பினாலும் மூழ்கியதொரு தேசம். கடந்த 30 வருடங்களுக்கு மேலாக தொடரும் நிலையிது.

ஈழத்தில் இப்போது நடக்கும் போராட்டங்களைப் பார்க்கும்போது அர்ஜன்டீனா அன்னையர்களின் போராட்டமே நினைவுக்கு வருகிறது. அந்நாட்டில் இளைஞர்கள் காணாமல் ஆக்கப்பட்ட போது, அவர்களை மீட்க அன்னையர்கள் தெருவுக்கு வந்து போராட்டங்களை நடத்தினர். சைக்கிளில் சென்ற தமது பிள்ளைகளை காணாமல் ஆக்கப்பட்டதை நினைவுபடுத்தி, கடதாசிச் சைக்கிள்களை செய்து வைத்தபடி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மிகவும் துயரமும் மனித மாண்புக்கு இழிவு சேர்க்கும் செயலுமாக, போராட்டத்தில் ஈடுபட்ட அன்னையர்களையும் காணாமல் ஆக்கப்பட்டனர். ஈழத்தில் காணாமல் ஆக்கப்பட்ட பிள்ளைகளுக்காக அன்னையர்கள் தம்மை உருக்கி காணாமல் போனபடி போராட்டத்தை நடத்துவதற்கு ஒப்பானதொரு செயலே இது.

1988ஆம் ஆண்டு இந்தியப் படைகளுக்கு எதிராக உண்ணா நோன்பிருந்து உயிர் துறந்தவர் அன்னை பூபதி. இவர் பத்துப் பிள்ளைகளின் தாய். ஆனாலும் தன் தாயகத்து பிள்ளைகளை காப்பாற்ற வேண்டும் என்று உண்ணா விரதப் போராட்டத்தை முன்னெடுத்தவர். இவர் மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களின் அன்னையர் முன்னணியின் முதன்மைச் செயற்பாட்டாளர். இந்திய இராணுவத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் யுத்தம் நடைபெற்ற போது, விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்த வேண்டும், உடனடியாக போரை நிறுத்த வேண்டும் என்று வலியுறுத்தி அன்னையர் முன்னணி சார்பில் போராட்டத்தை மேற்கொண்டார்.



அன்னையர் முன்னணியின் கோரிக்கைக்கு இந்தியப் படைகள் செவிசாய்க்கவில்லை. அன்னையர் முன்னணிக்கும் இந்தியப் படைகளுக்கும் இடையில் பேச்சுவார்த்தைகளும் இடம்பெற்றன. 1988இல் ஜனவரி 4ஆம் திகதி திருகோணமலையிலும் பெப்ரவரி 10ஆம் திகதி கொழும்பிலும் அன்னையர் முன்னணிக்கும் இந்தியப் படைகளுக்கும் இடையில் பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றன. அன்னையர் முன்னணியின் கோரிக்கைகளை இந்தியப் படைகள் ஏற்றுக்கொள்ளவில்லை. இதனையடுத்து சாகும்வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தை நடாத்த அன்னையர் முன்னணி தீர்மானித்தது.

சாகும்வரையிலான போராட்டத்திற்கு பல அன்னையர்கள் முன்வந்தனர். எனினும் ஒருவர் போராட்டத்தில் ஈடுபடுவதென தீர்மானிக்கப்பட்டது. இதன்படி குலுக்கல் முறையில் போராட்டத்தில் ஈடுபடுபவர் தெரிவு செய்யப்பட்டார். முதலில் அன்னம்மா டேவிட் தெரிவு செய்யப்பட்டார். பெப்ரவரி 14 மட்டக்களப்பு அமிர்தகழி மாமாங்கேஸ்வரர் ஆலயத்தில் உண்ணா நோன்பு இருந்தபோது அன்னம்மா டேவிட் கடத்தப்பட்டமை காரணமாக இவரது உண்ணாவிரதப் போராட்டம் தடைப்பட்டது. இதனையடுத்தே அன்னை பூபதி மார்ச் 19 போராட்டத்தில் குதித்தார்.

போராட்டத்தில் ஈடுபட்ட அன்னை பூபதி "சுயவிருப்பின் பேரில் உண்ணா விரதமாயிருக்கிறேன். எனக்கு சுயநினைவிழக்கும் பட்சத்தில் எனது கணவனோ, அல்லது பிள்ளைகளோ என்னை வைத்தியசாலையில் அனுமதிக்க முயற்சிக்கக் கூடாது" என்று கடிதம் எழுதி வைத்தார். நீர் மட்டும் அருந்தியபடி, உணவை விடுவித்து போராட்டத்தில் ஈடுபட்டார் அன்னை பூபதி. உண்ணா விரதப் போராட்டத்திற்கு ஆதரவளித்தவர்கள், அன்னை பூபதியின் பிள்ளைகள் கடத்தப்பட்டபோதும் இவரது உண்ணிவிரதப் போராட்டம் தொடர்ந்தது. இந்திய படைகளினால் இவரது கோரிக்கைகள் ஏற்றுக்கொள்ளாத நிலையில் சரியாக ஒரு மாதத்தின் பின்னர் ஏப்ரல் 19 அன்னை பூபதி உயிர் துறந்தார்.

இந்திய நாட்டின் அகிம்சை முகத்தை திலீபன் என்ற போராளி கிழித்தெறிந்த நிலையில் அன்னை பூபதியின் அறப்போராட்டம் ஊடாக ஈழப் பொதுமக்களாலும் இந்திய அரசின் அகிம்சை முகம் கிழிக்கப்பட்டது. அன்னைபூபதி ஈழத் தமிழ் மக்களின் அறப்போராட்டத்தின் முகம். இந்திய படைகளின் அராஜகங்களுக்கு எதிரான அற வழி ஆயுதம். ஜனநாயக வழிப் போராட்டத்தின் அடையாளம். இன்றைக்கு ஈழத்தில் தாய்மார்கள் தெருத் தெருவாக வீழ்ந்து புரண்டு போராட்டத்தில் ஈடுபடும்போது அன்னை பூபதியே நினைவுக்கு வருகிறார். இன்றைக்கு எங்கள் தெருவெல்லாம் அன்னை பூபதிகள் உள்ளனர். அன்னை பூபதி இந்திய அரசின் போரை நிறுத்த வேண்டும் என்பதற்காகவே உண்ணா விரதம் இருந்து உயிர் துறந்தவர். போரை நிறுத்தி, தம் தாயகத்து பிள்ளைகளை காப்பாற்ற வேண்டும் என்ற நோக்கமே அவரிடமிருந்தது.

அதைப்போலவே இன்று எங்கள் தெருவெங்கும் அன்னையர்கள் போராடுவதும் பிள்ளைகளுக்காகவே. காணாமல் ஆக்கப்பட்ட தம் பிள்ளைகளை விடுவிக்க வேண்டும் அவர்களின் உண்மை நிலை என்ன என்று அறிவிக்க வேண்டும் என்று போராடுகின்றனர்.

தம்மை உருக்கி, தம்மை அழித்து மேற்கொள்ளும் இந்தப் போராட்டத்திற்கும் அன்னை பூபதியின் போராட்டத்திற்கும் மிக நெருக்கம் உண்டு. எங்கள் அன்னையர்கள் அன்னை பூபதிகள் நடத்தும் போராட்டங்கள் இலங்கை அரசின் கொடிய இன ஒடுக்குமுறை முகத்தை அம்பலம் செய்கிறது.

தாய் பூமியாகவும் தெய் வமாகவும் கருதப்படுபவள். அவளின் சினத்திற்கும் சீற்றத்திற்கும் கண்ணீருக்கும் வலிமையுண்டு.

எங்கள் அன்னையர்கள், அன்னை பூபதிகளாய் வயிற்றில் நெருப்பை நிறைத்திருக்கையில் இத்தீவு நெருக்கடியிலும் துயரத்திலும் புகைந்தபடி இருக்கும்.

**தாயகன்**

# தமிழ்ப் பொதுவேட்பாளர்

# முட்டி மோதும் தமிழ்க் கட்சிகள்

நடைபெறவிருக்கின்ற ஜனாதிபதி தேர்தலில் தமிழ் பொது வேட்பாளர் ஒருவரை களமிறக்குவது தொடர்பில் தீர்க்கமான பேச்சுவார்த்தைகள் எவையும் முன்னெடுக்கப்படாத நிலையில் தமிழ்க் கட்சிகள் தமக்குள்ளேயே முட்டிமோத ஆரம்பித்து விட்டன.

அதிலும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் உறுப்பினர்களுக்குள்ளேயே அணிவகுத்து முரண்படும் அளவிற்கு நிலைமைகள் பொதுவெளிக்கு வந்தாகி விட்டது.

சிறிலங்கா சுதந்திரமடைந்து முக்கால் நூற்றாண்டாகிறது. இந்நிலையில் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் 2005ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலை புறக்கணிக்குமாறு வடக்கு, கிழக்கு மக்களை வேண்டிக் கொண்டது.

அதற்கு அமைய விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டிற்குள் இருந்த பகுதிகளில் மக்கள் வாக்களிப்புக்குச் சென்றிருக்கவில்லை. இந்தவொரு நிகழ்வினைத் தவிர அனைத்துச் சந்தர்ப்பங்களிலும், தமிழ்த் தரப்புக்களின் சமிக்ஞைகளுக்கு அமைய சிங்கள தேசியவாத, பௌத்த மேலாதிக்கவாத தலைவர்களுக்கே வாக்களித்து வந்துள்ளனர்.

அவ்வாறு வாங்களித்து வந்தமையால் எந்தவிதமான நன்மைகளையும் தமிழ் மக்கள் இதுவரையில் பெற்றுக் கொண்டிருக்கவில்லைஎன்பதே யதார்த்தமாக உள்ளது. மறுபுறம், தமிழ் மக்களின் பூர்வீகப்பிரதேசங்கள் சுருங்கிக் கொண்டும், சனத்தொகை எதிர்மறை வேகத்திலும் சென்றது தான் மீதமாகவுள்ளது.

இத்தகையதொரு நிலையில், தமிழ் மக்கள் தொடர்ந்தும் தென்னிலங்கை சிங்கள, பௌத்த மேலதிக்கவாத தலைமைகள் பசுந்தோல் போர்த்திக்கொண்டு வருவதை ஏற்றுக்கொண்டு வாக்களிக்க வேண்டுமா என்ற கேள்விகளில் மறுதலிப்பில்லாத நியாயங்கள் காணப்படுகின்றன.

தமிழ் மக்கள் ஜனாதிபதி தேர்தலில் வாக்களிக்க வேண்டுமா இல்லையா என்ற விடயத்தில் முதலாவதாக உள்ள தெரிவு, தமிழ் மக்கள் ஜனாதிபதி தேர்தலை முற்றுமுழுதாகப் புறக்கணிப்பதாகும்.

இந்தத் தெரிவையே கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி முன்மொழிகின்றது. அந்தத் தரப்பின் முன்மொழிவுக்கு அமைவாக, தேர்தலை புறக்கணிப்பதாக வைத்துக்கொண்டால், அதனை நடைமுறைச்சாத்தியமாக்குவது எந்தளவு தூரம் சாத்தியமானது என்ற கேள்விகள் உள்ளன.

குறிப்பாக, தமிழ் மக்களிடத்தில் வெறுமனே ஊடக அறிவிப்புக்கள் ஊடாகவே, சுவரொட்டிகள் ஊடாகவே தேர்தலைப் புறக்கணிப்போம் என்றுரைத்து விட்டு அவர்கள் அதனை ஏற்றுக்கொண்டு செயற்படுவார்கள் என எதிர்பார்க்க முடியாது.

அதற்காக நீண்ட பணிகளை ஆற்றவேண்டியுள்ளது. அத்துடன், தமிழ் மக்கள் தமது தெரிவுகளை வெளிப்படுத்துவதற்கு சந்தர்ப்பம் அளிக்கப்படாமையானது ஜனநாயக மறுதலிப்பாகவும் அடையாளப்படுத்தப்படலாம்.

தற்போது, ஜனநாயக முறைமையில் அனைத்து தமிழ்த் தேசியக் கட்சிகளும் நகருவதற்கு முற்படுகையில், ஜனநாயக கடமையை செய்வதற்கு தடுக்கின்ற தரப்பாகவும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி அடையாளப்படுத்தப்பட்டு விடும். அவ்விதமான நிலைமையானது அந்தக் கட்சியின் எதிர்கால அரசியல் செயற்பாடுகளுக்கு பெரும் பின்னடைவுகளை ஏற்படுத்தும்.

ஆகவே, ஜனாதிபதி தேர்தலை ஒட்டு மொத்த தமிழ் மக்களும் புறக்கணிப்பது என்ற முன்மொழிவு நடைமுறையில் மிகவும் கடினமானதொரு செயற்பாடாக உள்ளது.

அவ்விதமான சூழலில் அடுத்துள்ள தெரிவாக இருப்பது 'தமிழ் பொதுவேட்பாளர்' ஒருவரை நிறுத்துவதாகும். இந்த முன்மொழிவை முதன்முதலாகச் செய்தவர் ஈ.பி.ஆர்.எல்.எப்.இன் தலைவர் சுரேஷ்பிரேமச்சந்திரன் தான்.

தென்னிலங்கையில் மூன்று வேட்பாளர்கள் போட்டிக்களத்துக்கு வருகின்றபோது அவர்களால் வெற்றிக்கான பெரும்பான்மை சதவீதத்தினைப் பெற்றுக்கொள்ள முடியாது.

எனவே, இரண்டாவது சுற்று வாக்கு எண்ணிக்கை இடம்பெறுகின்றபோது, தமிழ் மக்களின் 11இலட்சம் வாக்குகளில் பெருவாரியான வாக்குகளைப் பெற்றுள்ள தமிழ் பொதுவேட்பாளரின் வாக்குகள் அந்த வெற்றிக்கு தேவையாக இருக்கும்.

ஆகவே வெற்றி பெறுவதற்கு முயற்சிக்கும் தென்னிலங்கை வேட்பாளர் தமிழ் பொதுவேட்பாளருடன் பேரம்பேசலுக்கு வருவார். அந்தச் சந்தர்ப்பத்தில் தமிழ் மக்களின் சார்பில் பொதுவேட்பாளரின் ஊடாக முன்னிறுத்தப்பட்ட நிபந்தனைகளில் கணிசமானவற்றை ஏற்கச் செய்ய முடியும்.

சுரேஷ்பிரேமச்சந்திரன் பொதுவேட்பாளரை நிறுத்தவதற்கு கூறும் காரணமும் ஏற்றுக்கொள்ளக் கூடியது என்பதோடு தமிழ்களுக்கு இதனைத் தவிர வேறு மூலோபாயத் தெரிவுகளும் இல்லை.

ஈ.பி.ஆர்.எல்.எப்.ஐ பொறுத்தவரையில் தற்போது மக்கள் ஆணையின்றி இருக்கின்றவொரு தரப்பாக உள்ளது. ஆகவே அதன் முன்மொழிவை பொது வெளியில் ஏற்றுக்கொள்ளச் செய்வதென்பது முயற்கொம்பான காரியமாகும்.

எனினும், ஈ.பி.ஆர்.எல்.எப்.இன் தலைவர் சுரேஷ், தாம் பங்கெடுத்துள்ள ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணிக்குள் கொள்கையளவில் தமிழ் பொதுவேட்பாளர் முயற்சிக்கு இணக்கத்தை எட்டியுள்ளார்



ஆனால் புளொட், ரெலோ, ஜனநாயகப் போராளிகள் இதய சுத்தியுடன் அந்த இணக்கத்தை ஏற்றுக்கொண்டார்களா என்ற கேள்விகள் அதிகமாகவே உள்ளன. ஏனென்றால், ரெலோவின் தலைமை தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு நெருக்கமாக இருக்கின்றது என்றொரு பார்வை உள்ளது.

அதுமட்டுமன்றி, ஐ.நாவுக்கு கடிதம் உள்ளிட்ட பல விடயங்களில் முன்னின்று செயற்படுவதற்கு தயாராக இருந்த ரெலோ இந்த விடயத்தில் நழுவல் போக்கில் உள்ளது. அனைத்துக்கட்சிகளும் ஒன்றிணைந்தால் பொதுவேட்பாளர் சாத்தியமென்று கூறி ஓடும்புளியம்பழமுமாக உள்ளது.

அதேநேரம், புளொட் வழமையாகவே தென்னிலங்கை தலைவர்களை பகைத்துக்கொண்டது கிடையாது. எனினும் புளொட் தமிழ் பொதுவேட்பாளர் ஒருவரை நிறுத்துவதாக இருந்தால் முக்கியமாக இலங்கைத் தமிழரசுக்கட்சியின் ஆதரவைப் பெற வேண்டும் என்பதில் உறுதியாக உள்ளது.

புளொட் அவ்விதமான நிலைப்பாட்டை எடுப்பதற்கு காரணம் உள்ளது. குறிப்பாக, புளொட்டின் தலைமையின் நாடாளுமன்ற தேர்தல் வெற்றி அவரது தந்தையின் வாக்குகளை மையப்படுத்தியது. ஆகவே தமிழரசுக்கட்சியின் நிலைப்பாட்டுக்கு எதிராகச் செல்கின்றபோது, அவரது நாடாளுமன்ற வெற்றி என்பது தடைப்படுவதற்கு அதிக சந்தர்ப்பங்கள் உள்ளன.

அதேநேரம், ஜனநாயகப் போராளிகளைப் பொறுத்தவரையில் அந்த அணியினர் அண்மையில் ஐக்கிய தேசியக் கட்சியின் உபதலைவர் ரவிகருணாநாயக்கவை, ஸ்ரீரெலோ தலைமையிலான அணியினருடன் இணைந்து சென்று இரகசிய சந்திப்பில் ஈடுபட்டுள்ளனர்.

மேலும், கடந்தகாலத் தேர்தல்களின் போது ராஜபக்ஷக்களைக் கூட இந்த அணியினர் நேரில் சந்தித்து பேச்சுக்களை நடத்தியிருக்கின்றனர். ஆகவே ஜனநாயகப் போராளிகள் அமைப்பு கொள்கைக்கு நேர்மையானதா என்கிற சந்தேகம் தொடர்ச்சியாகவே காணப்படுகின்றது.

அதுமட்டுமன்றி, அந்த அமைப்பினால் ஜனாதிபதி தேர்தலில் குறிப்பிடப்படும் படியாக வாக்குகளை அள்ளிச்சேர்க்க முடியாது என்பது கடந்த காலத் தேர்தல் முடிவுகள் வெளிப்படுத்தியுள்ளன.

இவ்வாறான நிலையில், இலங்கைத் தமிழரசுக்கட்சியின் தலைவர் சேனாதிராசா, மற்றும் பொதுச்செயலாளர் வைத்தியர் சத்தியலிங்கம் ஆகியோர் பொதுவேட்பாளர் குறித்து மௌனம் கலைப்பதற்கு தயாராக இல்லை.

ஆனால் நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரனின் அணியினர் பொதுவேட்பாளர் காலத்தின் தேவை என்பதை ஏற்றுக்கொண்டுள்ளனர். அந்த அணியில் உள்ள, கே.வி.தவராசா, அரியநேத்திரன், ஸ்ரீநேசன், யோகேஸ்வரன், கோடீஸ்வரன் என்று பட்டியல் நீளுகின்றது.

இங்கே சிறீதரன் அணியில் உள்ள அவருக்கு மிக நெருக்கமான சகாவான நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலாநான் பொதுவேட்பாளர் விடயத்தினை ஏற்றுக்கொள்வதற்கு தாயாராக இல்லை. அதற்கான காரணங்கள் அனைவரும் அறிந்தவை தான். அதனை மீண்டும் இங்கே தெளிவாக கூற வேண்டிய அவசியம் இல்லை.

இந்நிலையில், தமிழரசுக்கட்சியின் சுமந்திரன் தலைமையிலான அணியினர் பொதுவேட்பாளர் விடயத்தினை எதிர்க்கின்றார்கள். அவர்கள் தென்னிலங்கையில் இனவாதம் மேலோங்கிவிடும் என்று அச்சப்படுவதாக கூறுகின்றார்கள். இந்தக் கூற்றை முதலில் தெரிவித்தவர் சம்பந்தன் தான்.

பின்னர் சம்பந்தனின் தர்க்கங்களை அப்படியே வாரியிறுக்கிக் கொண்ட சுமந்திரன் தரப்பு இப்போது, சம்பந்தனையும் தமது அணிக்குள் உள்வாங்கிக்கொண்டு பொதுவேட்பாளர் விடயத்துக்கு போர்க்கொடி தூக்கியுள்ளது.

அதுமட்டுமல்ல, தென்னிலங்கை தலைவர்களில் ஒருவரின் வெற்றிக்காக 'பெட்டிகள் வாங்கப்பட்டு முன்னெடுக்கப்பட்டு வரும் முயற்சிகள்' என்றும் பிரசாரங்களை அந்தத் தரப்பு செய்கின்றது.

பொதுவேட்பாளர் பெட்டிகள் வாங்கி முன்னெடுக்கப்படும் முயற்சிகள் என்றால், அதனை எதிர்ப்பதும், தனியே ஒருவேட்பாளரை ஆதரித்து அவரை வெற்றிபெறுவதற்காக பிரசாரங்களை முன்னெடுப்பதும் கூட பெட்டிகள் வாங்கிய செயற்பாடு என்று பதிலுரைக்க முடியும் என்பதை அவை கிஞ்சித்தும் சிந்திக்கவில்லை.

அதேநேரம், தமிழ் பொதுவேட்பாளரால் இனவாதம் வலுத்துவிடும் என்று வாதிடுவது பொருத்தமற்றதாகும். ஏனென்றால், தென்னிங்கையில் இனவாதத்தின் மீது தான் அனைத்து தேர்தல்களும் நகர்கின்றன. ஆகவே புதிததாக பொதுவேட்பாளர் விடயத்தினை வைத்து இனவாதத்தினை கட்டியெழுப்ப வேண்டியதில்லை. அதுமட்டுமன்றி, சிங்களத் தலைவர்களே தயக்கமின்றி இனவாதத்தினை முன்னெடுக்கின்றபோது, தமிழர்கள் தமது உரிமைகளுக்காக ஒரு முயற்சியை முன்னெடுப்பதற்கு அச்சப்பட வேண்டியதில்லை.

மேலும், தென்னிலங்கை இனவாதம் தலைதூக்கிவிடும் என்பதற்காக இலங்கைத் தமிழரசுக்கட்சி தமது நீண்டகாலக் கோரிக்கையான வடக்கு,கிழக்கு இணைப்பு, சமஷ்டி அடிப்படையிலான தீர்வு உள்ளிட்டவற்றை கைவிட்டுவிடுமா என்ற கேள்விகளும் சுமந்திரன் தரப்பின் முன்னால் நிற்கின்றன.

ஆகவே, இனவாதம் தலைதூக்கும் என்ற தர்க்கம் ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல. அதேபோன்று பெட்டிகள் வாங்கினார்கள் என்ற தர்க்கமும் ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல.

நமது ஈழநாடு
www.namathueelanadu.com
குரல் 04 மலர் 46 ஏப்ரல் 2024 மின்னஞ்சல் contact@namathueelanadu.com

# ரணில்,சஜித்,அநுரவைக் கையாள தேவையொரு வியூகம்

ஜனாதிபதி தேர்தல் எதிர்வரும் ஒக்டோபர் 17ஆம் திகதிக்குள் நடத்தப்படுமென சிறிலங்கா தேர்தல்கள் திணைக்களம் அறிவித்துள்ளது. அரசியலமைப்பின் பிரகாரம் குறித்த காலத்திற்குள் தேர்தல் நடத்தப்பட வேண்டுமென கூறப்பட்டுள்ளது.

ஜனாதிபதி தேர்தலை ஒத்திவைப்பதற்கு தற்போதைய நிலைமைகளில் எந்தவிதமான காரண, காரியங்களும் இல்லை. எனினும், ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னதாக நாடாளுமன்றத் தேர்தலை நடத்துவதற்கான வாய்ப்புக்கள் இருப்பதாக கூறப்படுகின்றது.

ஆனால், ரணில் விக்கிரமசிங்கவைப் பொறுத்தவரையில், ஜனாதிபதி தேர்தலுக்கே செல்வதற்கான தயார்ப்படுத்தல்களில் ஈடுபட்டு வருகின்றார் என்பது வெளிப்படையாகின்றது.

இவ்வாறான நிலையில், இந்த ஜனாதிபதி தேர்தலில் ரணில், சஜித், அநுர ஆகிய மூன்று வேட்பாளர்கள் பிரதான போட்டியாளார்களாக இருப்பார்கள் என்பது தற்போதைக்கு உறுதியாக உள்ளது.

எனினும், சஜித்தையும் ரணிலையும் இணைக்கும் செயற்பாடுகளும் முன்னெடுக்கப்படுகின்றன. அந்த முயற்சி வெற்றி பெற்றால் ரணில் மற்றும் அநுரவுக்கு எதிராகவே போட்டி நிலை தோன்றும்.

அதேநேரம், மும்முனைப்போட்டியா, இருமுனைப்போட்டியா என்பதற்கு அப்பால் தென்னிலங்கையைச் சேர்ந்த இந்த மூன்று நபர்களுமே தமிழ் மக்கள் விடயத்தில் எந்தவிதமான உறுதிமொழிகளையும் வழங்குவதற்கு தயாராக இல்லை.

பொதுவேட்பாளர் ஒருவர் நிறுத்தப்பட்டால் கூட, அவரின் நிபந்தனைகளை மையப்படுத்தி பேச்சவார்த்தை மேசைக்கு வருவார்கள் என்று கூடக் கருத முடியாதுள்ளது.

காரணம், ரணில் தனக்கு சார்ப்பாக இருக்கும் டக்ளஸ், பிள்ளையான், வியாழேந்திரன், கருணா, அங்கஜன் உள்ளிட்டவர்களை மையப்படுத்தி தமிழர்களின் வாக்குகளைப் பெற்றுவிடலாம் என்று கருதுகின்றார்.

சஜித், தன்னுடன் அனைத்துச் செயற்பாடுகளிலும் பங்கேற்றுவரும், சுமந்திரன், சாணக்கியன், மனோகணேசன் மற்றும ரவூப் ஹக்கீம், ரிஷாத் பதியூதீன் ஆகியோரைப் பயன்படுத்தி சிறுபான்மை வாக்குகளைப் பெற்றுவிடலாம் என்று கருதுகின்றார்.

அநுரவைப் பொறுத்தவரையில் ரணில், சஜித் மீதுள்ள கடந்தகால வெறுப்பின் காரணமாக தானே நேரடியாகச் சென்று வார்த்தை ஜாலத்தின் ஊடாக சிறுபான்மை மக்களின் வாக்குகளைப் பெற்றுவிடலாம் என்று கருதுகின்றார். அது மட்டுமன்றி தமது தோழர்கள் ஊடாக நேரடியாக வாக்குச் சேகரிப்பை வடக்கு, கிழக்கில் முன்னெடுப்பதற்கு முடியும் என்றும் கருதுகின்றார்.

அந்த வகையில் ரணிலோ, சஜித்தோ, அநுரவோ எந்தவொரு பேரம்பேசலுக்கும் வரத்தயாராக இல்லை. அவர்களைப் பொறுத்தவரையில் தென்னிலங்கை வாக்குகளையும் மேலதிக தேவைக்காக தமிழ், முஸ்லிம் வாக்குகளை தம்முடன் உள்ள சிறுபான்மை தரப்புக்களை பயன்படுத்திப் பெற்றுக்கொள்ள முடியும் என்பதே கணக்கு.

வேட்பாளர்கள் கணக்கு இவ்வாறு இருக்கையில் தேர்தலை புறக்கணிக்கப்போவதாகவும், பொதுவேட்பாளரை நிறுத்தப்போவதாகவும் முயற்சிகளை எடுக்கும் தமிழர் தரப்பு எவ்விதமான நகர்வினைச் செய்ய வேண்டும் என்பது தான் இங்குள்ள பிரதான கேள்வியாகின்றது.


ஆகவே, பேரம்பேசுவதற்கு தயாரில்லாத தென்னிலங்கையை கையாள்வதற்கான வியூகம் தான் தற்போதே தேவையாகவுள்ளது. அது சில வேளைகளில் பொதுவேட்பாளர் பரிசீலனைக்கும், தேர்தல் புறக்கணிப்பு முயற்சிக்கும் அப்பால் சிந்திக்க வேண்டியுள்ளது.




நீ தந்த இசையில் உலகமே துயிலெழுந்தது.
தமிழ் மகளே அன்று என்னதான் நடந்தது?.....
நாங்கள் கண்டதுதான் என்ன?
சாதித்த சாதனைகள் எத்தனையோ கோடி...
உரிமை இழந்தோம்.
உடைமைகளையும் இழந்தோம். -ஆனால்
உன் புகழால் உயர்ச்சி பெற்றோம்.
கோடான கோடி கண்கள்
கோபுரம் போல் கல்லறைக்குள் வாழ....!
சாதித்த தமிழனின் தன்மான உணர்வை
தட்டி எழுப்பிய சரித்திரங்கள் பல கோடி.
சதி செய்த நய வஞ்சகர்களின் சூழ்ச்சியால் சரிந்தது,
சரித்திர உலகம்.
இது ஒன்றும் நிரந்தரம் அல்ல.....!?
வாழ்வோம் வாழ்வோம் வீழ்ந்து விட மாட்டோம்....

ஆ.மருதமண்

## மறைந்த காட்டுனிஸ்ட் அஸ்வினின் தீர்க்கதரிசன கருத்தோவிய தொகுப்புகளிலிருந்து



# தமிழ்ப் பொது வேட்பாளர் சாத்தியமா?



**செல்வழகன்**

இலங்கையில் இந்த வருடத்தில் ஜனாதிபதித் தேர்தல் கட்டாயம் நடைபெற வேண்டும். எதிர்வரும் ஒக்ரோபர் மாதத்துக்குள் இந்தத் தேர்தல் நடைபெறும் என்ற நிலையில் தென்னிலங்கையில் தேர்தல் களம் சூடு பிடித்துள்ளது. பலரும் தேர்தலில் போட்டியிடும் ஆர்வத்தில் உள்ளனர். தம்மிக பெரேரா, திலித் ஜயவீர, விஜயதாச ராஜபக்ச, ரொ~hன் ரணதுங்க, தயாசிறி ஜயசேகர, பாட்டலி சம்பிக்க ரணவக்க என ஒரு பட்டாளம் தேர்தலில் குதிக்கும் ஆசையோடு உள்ளனர். ஆனால் களத்தில் தேசிய மக்கள் சக்தியின் அனுரகுமார திசாநாயக்க, ஐக்கிய மக்கள் சக்தியின் சஜித் பிரேமதாஸ ஆகிய இருவரும் தாம் வெல்லும் தலைவர்கள் என உறுதியாக நம்புகின்றனர். ரணில் விக்கிரமசிங்க மதில் மேல் பூனையாகவே இருக்கிறார். களத்தில் அவர் இன்றளவும் மூன்றாம் நிலையிலேயே உள்ளார். தனக்குச் சாதகமான களத்தை உருவாக்கும் முயற்சியில் அவர் மெதுவாகக் காய்களை நகர்த்தி வருகின்றார்.

சிறுபான்மை சமூகங்களின் தலைவர்கள், குறிப்பாக, மலையகத்தைச் சேர்ந்த தமிழ் முற்போக்குக் கூட்டணி, முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் என்பவற்றின் தலைவர்கள் சஜித்தோடு நின்றாலும் அவர்கள் எவருமே இன்னமும் யாருக்கு ஆதரவு என்பதைத் தெரிவிக்கவில்லை.

அவர்கள் வெல்லுந் தரப்பை இன்னமும் அடையாளம் காணவில்லை. தேர்தல் களத்தில் அத்தகையதொரு வெற்றியைக் கட்டியம் கூறும் சூழலும் இன்னமும் உருவாகவில்லை. உடைவுகள், கட்சி தாவல்கள், வெவ்வேறு கூட்டணி உருவாக்கங்கள் நிகழ்வதற்கான புறநிலைகள் இன்னமும் இருக்கின்றன. எனவே, அவசரப்பட்டு எந்த முடிவையும் எடுக்க முடியாத நிலைமைதான் உள்ளது.

இந்த நிலையில் ஜனதிபதி வேட்பாளராக தமிழர் தரப்பில் இருந்து தமிழ்ப் பொது வேட்பாளர் என்ற ஒரு கருத்து முன்வைக்கப்பட்டது. ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் பங்காளிகளில் ஒருவரான சுரேஸ் பிரேமச்சந்திரனே இந்தக் கருத்தை முதலில் கூட்டணிக்குள் கொண்டு வந்தார். அதனை ஏனைய பங்காளிகளான புளொட், ரெலோ தலைவர்களும் கொள்கையளவில் ஏற்றுக் கொண்டனர்.

‘பொது வேட்பாளரை முன்மொழிவதில் பிரச்சினையில்லை. ஆனால் பொது வேட்பாளராக களம் இறங்குபவர் குறைந்தது ஆறு இலட்சம் வாக்குகளையாவது பெற வேண்டும். சில ஆயிரம் வாக்குகளை ஒருவர் பெறுகின்ற சூழ்நிலை வரின் அது அவமானகரமான, கேலிக்கூத்தான விடயமாகப் போய்விடும். அதற்காக பெரியளவில் எல்லோரும் சேர்ந்து பிரச்சாரங்களை முடுக்கி விட்டு பெரிய ஆதரவு அலையை உருவாக்க வேண்டும்’ என்று இக்கட்டுரையாளருடனான உரையாடலின் போது புளொட் தலைவர் சித்தார்த்தன் குறிப்பிட்டார்.

ஏலவே அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியின் தலைவர் குமார் பொன்னம்பலம், எம்.கே.சிவாஜிலிங்கம் ஆகியோர் ஜனாதிபதி வேட்பாளராகக் களமிறங்கி இருந்தனர். 1982 தேர்தலில் குமார் பொன்னம்பலம் கட்சி சார்ந்து வேட்பளராகக் களமிறங்கி 164,000 வாக்குகளைப் பெற்றிருந்தார். ஆனால் 2010 மற்றும் 2019ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற தேர்தல்களில் சுயேட்சை வேட்பாளராகப் போட்டியிட்டு சிவாஜிலிங்கம் முறையே 9000, 12000 வாக்குகளவில் பெற்று கேலிக்கூத்தானார். அடிப்படையில் மகிந்த ராஜபக்சவை வெல்ல வைப்பதற்கான மறைநிகழ்ச்சிநிரலிலேயே சிவாஜிலிங்கம் போட்டியிட வைக்கப்பட்டார் என்ற கருத்தும் அப்போது முன்வைக்கப்பட்டது.

சுரேஸ் பிரேமச்சந்திரன் தமிழ்ப் பொதுவேட்பாளர் தொடர்பில் அறிவித்த பின்னர் அதற்கான எதிர்வினை தமிழரசின் பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரனிடமிருந்தே வந்தது.

சிங்கள இனவாதத்தைத் தூண்டி இனவாத சக்திகளை வெல்ல வைப்பதற்கான முயற்சியே பொது வேட்பாளர் என அவர் குறிப்பிட்டார். பின்னர் சம்பந்தனும் தமிழ்ப் பொது வேட்பாளர் முயற்சியை எதிர்த்து அறிக்கை வெளியிட்டார். ஆனால் தமிழரசின் பாராளுமன்ற உறுப்பினர் சிறிதரன் அதனை கொள்கையளவில் ஏற்பதாகக்கூறி வரவேற்றார். இன்னொரு தமிழரசு பாராளுமன்ற உறுப்பினரான சார்ள்ஸ் நிர்மலநாதன் தமிழ் மக்கள் பொது வேட்பாளர் தொடர்பில் ஆர்வமற்று உள்ளனர் என்று கருத்து வெளியிட்டார்.

‘சிங்களவர்களை நம்ப முடியாது. நாங்கள் தொடர்ந்தும் ஏமாற்றப்பட்டுள்ளோம். தேர்தலைப் புறக்கணிக்கவும் முடியாது. எனவே, தமிழ்த் தேசியக் கட்சிகள் ஒரு பொதுவான முடிவுக்கு வர வேண்டும்’ என தமிழரசுக் கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும், தமிழரசுக் கட்சியின் செயலாளர் பதவிக்கு முன்மொழியப்பட்டவருமான ஸ்ரீநேசன் தெரிவித்தார்.

தமிழரசின் முக்கியஸ்தர் சி.வி.கே.சிவஞானம் பொது வேட்பாளர் தெரிவு என்பது பிரதேசவாதத்தை வளர்க்கும் என்றார்.இப்படி தமிழரசுக் கட்சிக்குள் பொது வேட்பாளர் தொடர்பில் எதிரும் புதிருமான வாதங்கள் காணப்படும் போதும் கட்சியாக பொது வேட்பாளரை நிறுத்தும் முடிவை தமிழரசுக் கட்சி ஏற்காது என்றே தெரிகிறது. கடந்த காலங்களில் கூட்டமைப்பாக இயங்கிய போதிலும் தமிழரசுக் கட்சியே ஜனாதிபதி வேட்பாளர்களுடன் பேரம்பேசலில் ஈடுபட்டு வரப்பிரசாதங்களைப் பெற்றுக் கொண்டமை இரகசியமானதல்ல. யாரோ ஒருவருடன் அது ரணில் அல்லது சஜித்துடன் பேரம்பேசி அவர்களில் ஒருவரை ஆதரிக்கும் நிலைப்பாட்டிற்கே தமிழரசுக் கட்சி செல்லும் என்பதே பொதுவான எதிர்பார்ப்பாகும். தமிழ் வேட்பாளர் ஒருவருக்கு வாக்களிப்பது எப்படி இனவாதமாகும் என்று சுமந்திரனுக்கு சுரேஸ் பிரேமச்சந்திரன் பதில் கேள்வி எழுப்பியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

தமிழ்த் தேசிய முன்னணி என்ற லேபலில் வெளிக்காட்டப்படும் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சி ஜனாதிபதி தேர்தலைப் புறக்கணிக்க வேண்டும் என்ற தற்கொலை முடிவை எடுத்துள்ளது. புறக்கணிப்பதன் மூலம் எதைச் சாதிக்கப் போகிறது என்பதை அக்கட்சி தெரிவிக்கவில்லை.

அதேநேரம் தமிழ் மக்கள் கூட்டணித் தலைவர் சி.வி.விக்னேஸ்வரன் பொது வேட்பாளர் தொடர்பில் சாதகமான கருத்தை வெளியிட்டு, அது தொடர்பில் ஆராயும் கூட்டத்தையும் கூட்டினார். ஆயினும், சி.வி. விக்னேஸ்வரனுடைய கடந்த காலச் செயற்பாட்டின் பட்டறிவினால் அவரது கூட்டத்தில் எந்தக் கட்சியும் பங்குபற்றவில்லை. அவரே வேலன் சுவாமிகளையும் முன்மொழிந்தார்.

வேலன் சுவாமிகள் இந்தியாவில் பொறியியல் படிக்கச் சென்று சின்மயா மி~ன் துறவியாகி ஜாக்கிரத சைதன்ய என்ற தீட்சாநாமத்துடன் யாழ்ப்பாணத்தில் செயற்பட்டவர்.

இவரது அரசியல் சார்புநிலை காரணமாக மிசனில் இருந்து நீங்க வேண்டியேற்பட்டது. அதன் பின்னர் சிவகுரு ஆதீனம் என்ற ஒன்றை உருவாக்கி வேலன் சுவாமிகள் எனத் தன்னைப் பிரகடனப்படுத்திக் கொண்டார். ஆயினும், அவரது அரசியல் சார்ந்த செயற்பாடுகளால் அவரது ஆன்மீகச் செயற்பாடுகள் வலுவிழந்து போயின. பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான இயக்கத்தின் முக்கிய செயற்பாட்டாளராக அவர் திகழ்ந்தார். எங்கும் நடைபெறும் ஆர்ப்பாட்டங்களில் வேலன் சுவாமிகளது பிரசன்னத்தைக் காணலாம். சமயஞ் சார்ந்த ஆர்ப்பாட்டங்களிலும் ஈடுபடுபவர். அத்தகைய ஒருவர் பொது வேட்பாளராக களம் இறங்குவதும், அதில் அவர் கணிசமான வாக்குகளைப் பெறுவதும் சாத்தியமில்லை.

சி.வி.விக்னேஸ்வரன் வேலன் சுவாமிகளைப் பிரேரித்தாலும், தான் ஒரு பொது வேட்பாளராகக் களமிறங்க வேண்டும் என்ற ஆவலே அவரிடம் உள்ளது. கடந்த தேர்தலில் அவர் வென்றதும் நடந்து கொண்ட முறையால் தமிழ் மக்கள் கூட்டணி பலவீனமடைந்து விட்டது.

அருந்தவபாலன் உட்பட கட்சியின் பிரமுகர்கள் பலரும் அவரை விட்டு விலகி விட்டனர். சொல்வது ஒன்று செய்வது ஒன்று என்ற ரீதியில் செயற்படுபவரே அவர் என்பது பொதுவான அப்பிப்பிராயம். ஏலவே ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியுடன் அவர் நடந்து கொண்ட முறையால் அவர்கள் ஜாக்கிரதையாகவே உள்ளனர். எனவே, சி.வி. விக்னேஸ்வரனின் நகர்வுகள் தொடர்பில் ஏனைய கட்சிகள் ஆர்வம் காட்டவில்லை. அவருடன் இழுபட்டுச் செல்லவும் அவை தயாரில்லை.

பொதுவேட்பாளர் யார் என்பதை இன்னமும் தீர்மானிக்கவில்லை. மனோ கணேசனை பொது வேட்பாளராக்குவது என்ற விடயத்தில் மனோவிடம் இருந்து சாதகமான பதிலில்லை. அதை அவர் விரும்பவில்லை என்று தமிழ் அரசியல்வாதிகள் சிலருக்கு சொல்லியும் விட்டார். அவரைப் பொறுத்தவரையும் பிரதான வேட்பாளர்களுடன் பேரம்பேசும் நிலைப்பாட்டிலேயே அவர் உள்ளார். வெல்லுந் தரப்பில் நின்று ஒரு அமைச்சராக வருவதே அவரது எதிர்பார்ப்பு. தான் சார்ந்த கொழும்புத் தமிழர்கள், மலையகத் தமிழர்களுக்கு எதையாவது பெற்றுக் கொடுப்பது என்றால் யாரோ ஒரு சிங்கள வேட்பாளரை ஆதரிக்க வேண்டும் என்பதே அவரது நிலைப்பாடு.

பல்கலைக்கழக மாணவர் ஒருவரை முன்மொழிவது என்றும் கதைக்கப்பட்டுள்ளது. ஆயினும் இன்று வரை யார் அந்தப் பொது வேட்பாளர்? அல்லது யார் யார் பொது வேட்பாளர்கள் என்று இன்னமும் யாரும் சரியாக கூறவில்லை.

இன்னொரு வகையில் கூறப்போனால் கட்சிகள், சிவில் பொது அமைப்புகள் எல்லோரும் இணைந்து ஒருவரை பிரேரிக்கவில்லை. பொதுவேட்பாளர் பின்னணியில் டான் ரிவி குகநாதன், அரசியல் பத்தியாளர் யதீந்திரா முதலியோர் உள்ளடங்கியுள்ள மக்கள் மனு என்ற அமுக்கக் குழுவும் செயற்படுகிறது.

எல்லோரும் பொதுவேட்பாளர் வேண்டும் என்பதை வலியுறுத்துகின்றனர். அவர்கள் எவரும் ஒரு பொது வேட்பாளரை இன்னமும் இனங் காணவில்லை.

கணிசமான அரசியல் கட்சிகள், சிவில் அமைப்புகள் இணைந்து ஒரு பொது வேட்பாளரைக் கண்டறிந்து, அதற்கான பெரும் பரப்புரைகளை நிகழ்த்தி வெல்ல வைக்க முடியுமானால் மட்டுமே இந்த பொதுவேட்பாளர் சங்கதி பொருத்தமானதாகும். அல்லாவிடில் இந்த முயற்சி விரைவிலேயே புஸ்வாணமாகி விடும். அந்த நிலைமைதான் தற்போது தெரிகிறது.




# அரசியல் இலாபத்துக்காக மீண்டும் கச்சதீவு

*தந்திரீகன்*

சிறிலங்காவுக்கும் இந்தியாவிற்கும் இடையே அவ்வப்போது மேலெழுந்து அணையும் விடயமாக கச்சதீவு உள்ளது. இந்திப் பாராளுமன்றத் தேர்தல் ஏழுகட்டங்களாக அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் கடந்த 19ஆம் திகதி தமிழ் நாட்டில் வாக்கெடுப்பு நடைபெற்றது.

இந்த வாக்கெடுப்புக்கு முன்னதாக தமிழ் நாட்டு அரசியல் கட்சிகளின் பிரச்சார மேடையில் கச்சதீவு விவகாரமே பிரதான பேசுபொருளாக மாறியிருந்தது. இந்த விடயத்தினை பா.ஜ.க.வின் இராமேஸ்வரக் கூட்டத்தில் கலந்துகொண்டிருந்த பிரதமர் நரேந்திரமோடியே தூபமிட்டு ஆரம்பித்து வைத்திருந்தார்.

அதன்பின்னர் அக்;கட்சியின் தமிழகத் தலைவர் குப்புசாமி அண்ணாமலை தகவல் அறியும் சட்டத்தின் மூலம் கிடைத்த பதில்களை வைத்து காய்களை நகர்த்தி காங்கிரஸ{க்கும், திராவிட முன்னேற்றக்கழகத்துக்கும் சேற்றை வாரியிறைத்தார்.

கச்சத்தீவு இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையில் உள்ள இலங்கைக்கு சொந்தமான ஒரு தீவாகும். இராமேஸ்வரத்திலிருந்து 24 கிலோ மீற்றரிலும், யாழ்ப்பாணத்திலிருந்து 63 கிலோமீற்றர் தொலைவிலும் உள்ளது.

இத்தீவின் பரப்பளவு 285 ஏக்கர்(1.15 சதுர கிலோ மீற்றராகும்). இந்த தீவில் மனிதர்கள் யாரும் தற்போது வசிக்கவில்லை. ஆனால் சிறிலங்கா கடற்படையின் கட்டுப்பாட்டில் காணப்படுகின்றது.

வருடத்தில் இரண்டு நாட்கள் மட்டுமே அந்தோணியார் ஆலய திருவிழாவுக்காக இந்திய சிறிலங்கா பக்தர்கள் அங்கு கூடுவதுண்டு. இந்த தடவை இந்தியத்தரப்பு புறக்கணிப்பைச் செய்தமையால் வெறுமனே சிறிலங்கா பக்கதர்களுடன் வழிபாடுகள் முடிவுக்கு வந்திருந்தன.

முன்னதாக 1170ஆம் ஆண்டில் சிறிலங்கா மன்னன் நிசங்க மல்லவினால் இராமேஸ்வரம், இராமநாதசுவாமிக்கு சாசனமாக ஒப்படைக்கப்பட்டது தான் கச்சத்தீவு என கூறப்படுகின்றது.

அந்தக் காலகட்டங்களில் இராமநாதசுவாமிக்கு அபிஷேகம் செய்வதற்காக நெடுந்தீவில் இருந்து பாலும், கச்சத்தீவில் இருந்து பூக்களும் கொண்டு வரப்பட்டதற்கான ஆதாரங்கள் உள்ளன.

இராமநாதசுவாமிக்குச் சொந்தமான கச்சத்தீவு என்பது இந்து சமய அறநிலையத்துறையின் கட்டுப்பாட்டில் வருகிறது. அப்படிப் பார்த்தால் இந்து அறநிலையத்துறையின் சட்டப்படி கச்சத்தீவு தாரை வார்க்கப்பட்டதே தவறு என்ற கருத்தும் உள்ளது.

அப்படியானால் கச்சத்தீவு சிறிலங்காவிடம் இருந்து இந்தியாவுக்கு கொடுக்கப்பட்டிருக்கின்றது என்ற தர்க்கம் முன்வைக்கப்படுகின்றது. ஆனால், 1925ஆம் ஆண்டிலேயே மதராஸ் ராஜதானியின் மீன் வளத்துறை மூலமாக சிறிலங்காவுக்கு கச்சத்தீவு ஒப்படைக்கப்பட்டு விட்டது என்றும் கூறப்படுகின்றது. அப்படியானால் கச்சத்தீவு இந்தியாவுடையது என்ற தர்க்கமும் உள்ளது.

எவ்வாறாக வரலாறு இருந்தாலும் சிறிலங்காவின் பிரதமராக பதவி வகித்த ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கவிற்கும், இந்திய பிரதமராக பதவி வகித்த இந்திராகாந்திக்கும் இடையில் 1974ஆம் ஆண்டு ஜுன் மாதம் 26ஆம் திகதி ஒப்பந்தத்தின் ஊடாக கச்சதீவு சிறிலங்காவுக்கு உரித்தானது.

கச்சதீவு தொடர்பான இரண்டாவது ஒப்பந்தம் 1976ஆம் ஆண்டு மார்ச் 23ஆம் திகதி கையெழுத்திடப்பட்டது. இந்த ஒப்பந்தத்தில் இந்தியாவின் வெளியுறவுத் துறை செயலர் கேவல் சிங்கும் சிறிலங்காவின் சார்பில் அந்நாட்டின் வெளியுறவு மற்றும் பாதுகாப்புச் செயலரான டபிள்யு.டி. ஜெயசிங்கவும் கையெழுத்திட்டனர்.

குறிப்பிட்ட காலம் வரை தமிழக மீனவர்கள் கச்சத்தீவில் ஓய்வெடுத்தல் உள்ளிட்டவற்றுக்கு அனுமதி இருந்தது. ஆனால் கடற்றொழில் காரணமாக இந்திய, சிறிலங்கா மீனவர்களுக்கு இடையே முறுகல் நிலையும் உருவானது.

தமிழக மீனவர்கள் தொடர்ந்து சிறிலங்கா கடற்படையினரால் கைது செய்யப்பட்டு வருவது வழமையாக மாறியமையால் இதனால் தமிழக அரசியலிலும் கடற்றொழிலாளர் விடயமும், கச்சதீவு விடயமும் பேசுபொருளாகவே மாறியது.

தற்போது சிறிலங்காவின் கட்டுப்பாட்டில் உள்ள கச்சத்தீவு இந்தியாவிற்கு சொந்தமானது என்றும் அதனை தி.மு.க. மற்றும் காங்கிரஸ் கட்சியினர் சிறிலங்காவிற்கு தாரை வார்த்து கொடுத்துவிட்டனர் என்பதுமே அ.தி.மு.க., பா.ஜ.க. உள்ளிட்ட கட்சிகளின் முக்கிய கருத்தாக உள்ளது.

ஜெயலலிதாவின் ஆட்சியிலும் இந்த விவகாரம் பேசப்பட்டது. கச்சத்தீவை மீட் பேன் என்று ஜெயலலிதா கூறிவந்தார். ஆனால் அதற்குள் அவர் உயிரிழந்துவிட்டார்.

இந்த நிலையில், ஜெயலலிதாவின் மரணத்தின் பின்னர் எடப்பாடி பழனிசாமி பா.ஜ.க.வுடன் கூட்டணி வைத்து தமிழகத்தில் தேர்தலை சந்தித்தார். அதுவரை காலமும் பா.ஜ.க. தமிழகத்தில் காலூண்ற முடியாது என்று கூறப்பட்ட நிலை அந்த தேர்தலில் மாறியது.

அ.தி.மு.க.வின் முக்கிய தொகுதிகளையும் எடப்பாடி பா.ஜ.க.விற்கு விட்டு கொடுத்தமையால் கடந்த தேர்தலில் பா.ஜ.க.வினர் பல இடங்களில் வெற்றி பெற்றனர். இப்பின்னணியுடன் தற்போது நடைபெற உள்ள பொதுத்தேர்தலில் பிரதமர் மோடி தலைமையிலான , பாரதீய ஜனதா கட்சி தமிழகத்தில் வெற்றியை உறுதி செய்துக்கொள்வதற்கு கச்சதீவு பிரச்சினையை கையில் எடுத்திருந்தது.

கச்சத்தீவு தாரை வார்க்கப்பட தி.மு.க. தான் காரணம் என்று குற்றச்சாட்டுக்கள் உள்ள நிலையில் தமிழக முதல்வர் ஸ்டாலின் கச்சதீவை மீட்க வேண்டும் என்று பிரதமர் மோடிக்கு கடிதம் மூலம் முன்னதாக கோரிக்கை வைத்திருந்தார்.

ஆனால் அப்போது அமைதிகாத்திருந்த பிரதமர் மோடி தேர்தல் அரங்கில் மட்டும் கச்சதீவை பற்றி பேசியுள்ளார். இதனால் தமிழகத்தை பொறுத்த வரை இந்த தேர்தலில் கச்சதீவு கடந்த காலங்களை விடவும் மிக முக்கிய இடத்தை பிடித்திருந்தது.

"இந்திய மக்கள் குறித்து சிந்திக்காது காங்கிரஸ் கட்சி கச்சத்தீவை சிறிலங்காவுக்கு தரைவார்த்தமை குறித்து புதிய தகவல்கள் வெளியாகியுள்ளது" என்று இந்திய பிரதமர் நரேந்திர மோடி தனது எக்ஸ் வலைத்தளத்தில் கடந்த மாதம் 31ஆம் திகதி பதிவிட்டிருந்தார்.

இதனையடுத்து பா.ஜ.க.தமிழக மாநில தலைவர் அண்ணாமலை, இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் உள்ளிட்டவர்கள் தி.மு.க. மற்றும் காங்கிரஸ் அரசை கடுமையாக சாட ஆரம்பத்தனர்.

கச்சத்தீவு ஒப்பந்தம் தொடர்பாக தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் பெறப்பட்ட ஆவணங்களை வெளியிட்ட பா.ஜ.க. மாநிலத் தலைவர் அண்ணாமலை, காங்கிரஸ{ம், தி.மு.க.வும் சதி செய்து இலங்கைக்கு கச்சத்தீவை தாரைவார்த்து விட்டமை உறுதியாகியுள்ளதாக குற்றஞ்சாட்டியிருந்தார்.

இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர், கச்சத்தீவை மீட்க இந்தியா அனைத்து விதமான முயற்சிகளை எடுத்து வருவதாக தெரிவித்துள்ளார்.

அத்துடன், கச்சதீவு விவகாரம் கடந்த 5 ஆண்டுகளாக நாடாளுமன்றத்தில் பல்வேறு கட்சிகளால் தொடர்ந்து எழுப்பப்பட்டு வருகிறது. தமிழக முதல்வர் எனக்கு பலமுறை கடிதம் எழுதியுள்ளார் என்று ஜெய்சங்கர் குறிப்பிடுகின்றார்.

தற்போதைய முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு நான் 21 முறை கச்சத்தீவு தொடர்பாக பதில் அளித்துள்ளேன். இது திடீரென எழுந்த பிரச்சினை அல்ல. பல ஆண்டுகளாக உள்ள இரு நாடுகளுக்கு இடையேயான ஒரு நேரடி பிரச்சினை. கச்சத்தீவு தாரைவார்க்கப்பட்டபோது மாநில அரசிடம் கலந்தாலோசிக்கவில்லை என்று தி.மு.க கூறுவதை ஏற்க முடியாது என்றும் அவர் குறிப்பிடுகின்றார்.

இந்தியாவின் நிலப்பரப்பில் அப்போதைய மத்திய அரசும், பிரதமர்களும் காட்டிய அலட்சியமே இது மாதிரியான பிரச்சினைகள் தொடர்ந்து எழக் காரணம். முன்னாள் பிரதமர்கள் யாரும் கச்சத்தீவு பற்றி கவலைப்படவில்லை என்பதுதான் உண்மை என்றும் ஜெயசங்கர் குறிப்பிட்டுள்ளார்.

இந்நிலையில் தமிழக முதல்வர் ஸ்டாலின், கடந்த 10 ஆண்டுகளில் எத்தனையோ முறை இலங்கைக்கு பயணம் செய்த மோடி ஒருமுறையாவது கச்சத்தீவை திரும்ப கேட்டாரா? இலங்கை ஜனாதிபதியை சந்தித்தபோதெல்லாம் கச்சத்தீவு இந்தியாவுக்கு சொந்தம் என்று சொல்லவில்லையே. அப்போதெல்லாம் மோடிக்கு கச்சத்தீவு ஞாபகம் இல்லை.

நேரு, இந்திரா காந்தி காலத்தில் நடந்தது எல்லாம் ஞாபகம் இருக்கும் மோடிக்கு, 2 ஆண்டுகளுக்கு முன்பு சென்னை நேரு உள்விளையாட்டு அரங்கில் நடைபெற்ற நிகழ்ச்சியில் முதல் கோரிக்கையாக, 'கச்சத்தீவை மீட்டு மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடி உரிமையை மீட்க வேண்டும் என்று கோரி னேன். அந்த கோரிக்கை மனுவைக் கூட படித்தீர்களா?

இரண்டாவதாக வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கர், கடந்த 2015இல் துறை செயலராக இருந்தபோது கச்சத்தீவு இந்தியாவின் பகுதியாக எப்போதும் இல்லை என்று தகவல் கொடுத்தார். இப்போது, தேர்தல் வருவதால் தங்கள் விருப்பத்துக்கு ஏற்ப தகவலை மாற்றி கொடுக்கிறார்.

மூன்றாவதாக கடந்த பல ஆண்டுகளாக கச்சத்தீவை பற்றி பாராளுமன்றத்தில் கேள்வி எழுப்பியபோது உரிய பதில் அளிக்கவில்லை.

எத்தனையோ பேர் தகவல் அறியும் உரிமைச்சட்டவிண்ணப்பம் அளித்தபோது தெளிவான பதில் கொடுக்கவில்லை. உச்ச நீதிமன்ற விசாரணையில் இருப்பதாக பதில் சொன்ன பா.ஜ.க. அரசு, தகவல் அறியும் உரிமைச்சட்டம் மூலம் எப்படி தவறான தகவல் தந்தார்கள்?

நான்காவதாக கச்சத்தீவுக்காக திடீர் கண்ணீர் வடிக்கும் மோடி, கடந்த 10 ஆண்டுகளில் வரலாற்றில் இல்லாத அளவுக்கு மீனவர்கள் கைது, துப்பாக்கிச்சூடு நடந்தபோது இலங்கையை கண்டித்தாரா.

சீனா குறித்து மோடி வாய் திறந்தாரா? அருணாச்சல பிரதேச பகுதிகளுக்கு சீனா சொந்தம் கொண்டாடி 30இக்கும் மேற்பட்ட இடங்ளுக்கு சீன மொழியில் பெயர்கள் வெளியிட்டுள்ளனர். அதற்கு என்ன சொல்லப் போகிறார்கள். இலங்கையை கண்டிக்கவும், சீனாவை எதிர்க்கவும் துணிச்சல் இல்லாத நிலையில், கச்சத்தீவு பற்றி பேசலாமா? என்று தெரிவித்துள்ளார்

ஆனால், முதல்வரின் கேள்விகளுக்கு எந்தவிதமான பதில்களையும் பா.ஜ.க.வழங்கியதாக இல்லை. அதேநேரம், கச்சதீவு சிறிலங்காவிடம் ஒப்படைக்கப்பட்டதன் விளைவாக கடந்த 20 ஆண்டுகளில் 6,184 இந்திய மீனவர்கள் இலங்கையால் கைது செய்யப்பட்டுள்ளனர். மேலும் 1,175 இந்திய மீன்பிடி படகுகள் ஆண்டுகளில் கைப்பற்றப்பட்டுள்ளனர் என்ற தரவுகளும் வெளியிடப்பட்டுள்ளன.

இந்தத் தரவுகள் பா.ஜ.கவுக்கு ஆதரவுத்தளத்தினை ஏற்படுத்தியுள்ளது. இந்த நிலைமைகள் இவ்வாறு இருக்கையில், சிறிலங்கா அரசாங்கம் குறித்த விடயம் சம்பந்தமாக வேடிக்கை மட்டுமே பார்த்துக்கொண்டிருந்தது.

ஈற்றில், வெளிவிவகார அமைச்சர் அலிசப்ரி, கச்சதீவு விடயம் முடிந்துபோன தொன்றாகும். தற்போது தமிழக அரசியலுக்காக பேசப்படுகின்றது என்று மட்டும் கூறி முற்றுப்புள்ளி வைத்துவிட்டார்.

ஆகவே, சிறிலங்காவைப் பொறுத்தவரையில் கச்சதீவை மீளவும் இந்தியாவுக்கு வழங்குவது என்பது இறைமையுடன் தொடர்புடைய விடயமாகும்.

அதேநேரம், அதற்கான முனைப்புக்களை காண்பித்தால் ஆட்சியில் உள்ளர்களுக்கு வடக்கு கடற்றொழிலாளர்கள் மற்றும் தென்னிலங்கை மக்களின் எதிர்ப்பு வெகுவாக இருக்கும். அடுத்து தேசிய தேர்தல்கள் என்பதால் ஆட்சியில் உள்ளவர்கள் அவ்விதமான முட்டாள் தனத்தினை மேற்கொள்ள மாட்டார்கள்.

அந்த வகையில் பார்க்கின்றபோது, தமிழக தேர்தல் அரங்கில் பா.ஜ.க கோசமாக கச்சதீவினை மீட்கப்பேவதாக முன்வைத்திருந்தாலும் இனி அந்த நிலைப்பாட்டிலிருந்து அக்கட்சியால் மாற முடியாது.

அவ்வாறாக இருந்தால் கச்ச தீவினை சிறிலங்காவிடமீருந்து மீட்பதற்கு இந்தியாவுக்கு உள்ள ஒரே தெரிவு தனது படைகளை அனுப்பி கைப்பற்றுவது தான். அதற்கான சாத்தியங்கள் எள்ள ளவும் இல்லை.

ஆனால், இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர், தேர்தலின் பின்னர் தமக்கு என்ன செய்ய வேண்டும் என்பது தெரியும் என்று கூறியிருப்பது தான் தற்போதைக்கு ஆச்சரியமாக உள்ளது.




# படைப்பாளிகள் மீது ஸ்ரீலங்கா அடக்குமுறை

# தீபச்செல்வன் மீதான விசாரணைக்கு தமிழ் தேசிய ஆய்வு அமையம் கண்டனம்



தமிழ் ஈழப் படைப்பாளிகள் மீது ஸ்ரீலங்கா அரசு பாரிய அடக்குமுறைகளை மேற்கொண்டு வருகின்றது என்றும் அதன் அண்மைய நடவடிக்கையாகவே எழுத்தாளர் தீபச்செல்வன்மீது ஸ்ரீலங்கா பயங்கரவாத தடுப்புப் பிரிவு விசாரணை நடாத்தியுள்ளது என்றும் குறிப்பிட்டுள்ள தமிழ் தேசிய ஆய்வு அமையம், எழுத்தாளர் தீபச்செல்வன்மீதான விசாணைக்கு கடும் கண்டணத்தை வெளியிட்டுள்ளது. இது தொடர்பில் நமது ஈழநாடு பத்திரிகையின் தமிழ் தேசிய ஆய்வு அமையம் மேலும் கூறியுள்ளதாவது:

**விசாரணை வலயத்தில் தீபச்செல்வன்**

“ஈழத்தில் மாத்திரமின்றி புலம் பெயர் தேசங்களிலும் தமிழ்நாட்டிலும் நன்கு அறியப்பட்ட ஈழத்தின் முன்னணி எழுத்தாளர் தீபச்செல்வன் நடுகல் மற்றும் பயங்கரவாதி நாவல்களால் மிகவும் பிரசித்தம் பெற்றவர்.

சிங்கள மக்கள் மத்தியிலும் தீபச்செல்வனின் ஈழ விடுதலை குறித்த எழுத்துக்களுக்கு வரவேற்பு காணப்படுவதுடன் ஒடுக்கப்பட்ட உலக மக்களுக்காக குரல் கொடுக்கும் இவரின் கவிதைகள் பன்னாட்டு மொழிகளில் வெளியாக உலக மக்கள் மத்தியிலும் தீபச்செல்வனுக்கு அறிமுகம் உள்ளது. ஈழத்தில் இனப்படுகொலை செய்யப்பட்ட தமிழ் மக்களின் நீதிக்கும் உரிமைக்கும் இவரது எழுதுகரங்கள் போராடி வருகின்றன.

இந்த நிலையில் எழுத்தாளர் தீபச்செல்வன், கடந்த ஏப்ரல் 11ஆம் திகதியன்று, கிளிநொச்சி பரந்தனில் உள்ள ஸ்ரீலங்கா அரசின் பயங்கரவாத தடுப்புப் பிரிவு அலுவலகத்தில் சுமார் மூன்றுமணிநேரம் தடுக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார்.

ஆக்க இலக்கியப் படைப்பாளியான தீபச்செல்வன், தமிழ் தேசிய கலை இலக்கியப் பேரவை என்ற அமைப்பின் தலைவராக இலக்கியம் சார்ந்த பல்வேறு பணிகளிலும் ஈடுபட்டு வருகின்ற நிலையில் அந்த அமைப்பின் ஊடாக கடந்த பெப்ரவரி மாதம் முன்னெடுத்த இலக்கிய வெளியீட்டு நிகழ்வுகாகவே இந்த விசாரணை நடாத்தப்பட்டது.

**மூத்த எழுத்தாளரை மதிப்பளிப்பது குற்றமா?**

ஈழத்தின் மூத்த எழுத்தாளர் நா. யோகேந்திரநாதன் எழுதியுள்ள 34 நாட்களில் நீந்திக்கடந்த நெருப்பாறு என்ற நூலின் வெளியீட்டு விழா தீபச்செல்வன் தலைமையில் கடந்த பெப்ரவரி மாதம் 10ஆம் திகதியன்று கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச சபையில் இடம்பெற்றுள்ளது. இந்த நாவல் வெளியீட்டு விழாவினை தலைமை தாங்கி நடாத்தியமைக்காகவே தீபச்செல்வனிடம் பயங்கரவாத தடுப்புப் பிரிவினர் விசாரணையை மேற்கொண்டனர். குறித்த நாவல், தமிழீழ விடுதலைப் புலிகளின் வீரம் செறிந்த குடாரப்பு தரையிறக்கம் குறித்த புத்தகம் என்பதனால்தான் ஸ்ரீலங்கா அரசு குறித்த புத்தக வெளியீட்டிற்கு எதிராக விசாரணையை துவங்கியுள்ளது.

விசாரணைக்கு அழைக்கப்பட்டிருந்த தீபச்செல்வனிடம், குறித்த நாவலை ஏன் நீங்கள் வெளியிட்டீர்கள் என்று கேள்வி முன்வைக்கப்பட்டுள்ளது. ஈழத்தினதும் கிளிநொச்சி மாவட்டத்தினதும் மூத்த எழுத்தாளர் நா. யோகேந்திரநாதன் என்றும் அவர் தற்போது நோய்வாய்ப்பட்டு உடல் இயங்க முடியாத நிலையில் உள்ளார் என்றும் அவர் தனது நாவலை வெளியீட்டு தருமாறு எங்களிடம் கோரியதற்கு இணங்கவும் இவரின் இறுதிக்காலத்தில் இந்த ஆசையை நிறைவேற்றி, மூத்த எழுத்தாளரை மதிப்பளிக்க வேண்டும் என்ற அடிப்படையில்தான் குறித்த நாவல் வெளியீட்டு விழாவை ஏற்பாடு செய்து நடாத்தியதாக அவர் கூறிள்ளார்.

**மீண்டும் புலிகள் என அச்சமா?**

அத்துடன் குறித்த நாவல் வெளியீட்டில் யார் எல்லாம் கலந்து கொண்டார்கள் என்றும் எவ்வளவு மக்கள் கலந்துகொண்டார்கள் என்றும் எத்தனை புத்தகங்கள் நாவல் வெளியீட்டில் விற்கப்பட்டன என்றும் எவ்வளவு ரூபாவுக்கு விற்கப்பட்டது என்றும் கேள்விகள் கேட்டப்படுள்ளன.

இதேவேளை குறித்த நாவலை வெளியிட யார் பண உதவி செய்தார்கள் என்றும் தீபச்செல்வனிடம் விசாரணை நடந்துள்ளது.

அத்துடன் நீங்கள் பிறந்தது முதல் என்ன செய்தீர்கள் என்றும் விசாரணையின்போது கேட்கப்பட்டு பதில்கள் பதிவு செய்யப்பட்டன. அத்துடன் குறித்த நாவல் விடுதலைப் புலிகளின் தாக்குதல் நடவடிக்கை பற்றியது என்பதால் விசாரணைக்கு அழைத்துள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது.

அத்துடன் எழுத்தாளர் நா. யோகேந்திரநாதன் எழுதியுள்ள 34 நாட்களில் நீந்திக்கடந்த நெருப்பாறு என்ற நாவலில் விடுதலைப் புலிகளின் மீளுருவாக்கம் பற்றிய கருத்துக்கள் இடம்பெற்றுள்ளனவா என்றும் தீபச்செல்வனிடம் விசாரணை இடம்பெறுள்ளது.

அவ்வாறான கருத்துக்கள் இந்த நூலில் இல்லை என்றும் இது கடந்த காலத்தில் இடம்பெற்ற யுத்தம் தொடர்பான பதிவே என்றும் தீபச்செல்வன் பதில் அளித்துள்ளார். இதேவேளை விடுதலைப் புலிகள் குறித்து எங்களை பேசவும் எழுதவும் அனுமதி மறுக்கிறீர்கள் என்றும் ஆனால் தென்னிலங்கையில் விடுதலைப் புலிகளைப் பற்றிய புத்தங்கள், திரைப்படங்கள் எடுக்கப்படுகின்றன என்றும் சுட்டிக்காட்டிய தீபச்செல்வன், எமது படைப்புரிமையை மாத்திரம் மறுக்க முடியாது என்றும் கூறியுள்ளார்.

**படைப்பாளிகள்மீது அரச ஒடுக்குமுறை**

தன்மீதான விசாரணை ஆக்க இலக்கியப் படைப்பாளிகள்மீது ஸ்ரீலங்கா அரசு மேற்கொள்ளும் அடக்குமுறை என்று தீபச்செல்வன் கூறியுள்ளார். கடந்த காலத்தில் ஸ்ரீலங்கா அரசு 43 ஊடகவியலாளர்களை படுகொலை செய்துள்ளது. அத்துடன் ஊடகங்கள் மீதும் ஊடகவிலாளர்கள்மீதும் கடுமையான தாக்குதல்களும் அச்சுறுத்தல்களும் இடம்பெற்றுள்ளன.

ஈழ மண்ணில் இருந்து பல ஊடகவியலாளர்களும் படைப்பாளிகளும் செயற்பாட்டாளர்களும் நாட்டில் வாழ முடியாத அச்சுறுத்தலால் வெளிநாடுகளில் தஞ்சம் புகுந்துள்ளனர். போர் முடிவுக்கு கொண்டுவுரப்பட்டதாக சொல்லப்படுகின்ற போதும் 15 ஆண்டுகள் ஆகின்ற போதும் ஸ்ரீலங்கா அரசு கருத்து சுதந்திரம்மீது தனது இரும்புக்கரங்களால் மேற்கொள்ளும் அடக்குமுறையை நிறுத்தவில்லை.

ஸ்ரீலங்கா அரசு பாரிய பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ளது. உணவுப் பொருட்களின் விலையேற்றம் மக்களை பெரும் திண்டாட்டத்திற்குள் தள்ளியுள்ளது. நாட்டைவிட்டு சிங்கள மக்களும் தமிழ் மக்களும் வெளியேறி வருகின்றனர்.

கடந்த காலத்தில் ஸ்ரீலங்கா அரசு மேற்கொண்ட மனித உரிமைகளுக்கு எதிரான செயற்பாடுகள் பன்னாட்டு அரங்கில் பேசுபொருளாகவும் ஸ்ரீலங்காமீதான எதிர்பாகவும் உள்ளது. இந்த நிலையில் பல நிபந்தனைகளுடன் ஸ்ரீலங்கா அரசுக்கு சர்வதேச நாணய நிதியம் கடன் உதவிகளை வழங்கி வருகின்றது.

இப்படியான நிலையிலும் ஸ்ரீலங்கா அரசு கருத்துச் சுதந்திரத்தை ஒடுக்கி, ஸ்ரீலங்காவை மேலும் அழிவுப் பாதைக்கு தள்ளி வருகின்றது.

ஸ்ரீலங்காவில் தொடர்கின்ற இத்தகைய கருத்துச் சுதந்திர மீறல்களையும் ஒடுக்குமுறைகளையும் பன்னாட்டு சமூகம் கண்டிக்க வேண்டும்.

ஸ்ரீலங்கா அரசின் இத்தகைய அடக்குமுறைகளை பன்னாட்டு சமூகம் தொடர்ந்தும் வேடிக்கை பார்க்கப் போகின்றதா? எழுத்தாளர் தீபச்செல்வன்மீதான இந்த விசாரணை என்ற அச்சுறுத்தல் இனியும் தொடரக்கூடாது, தடுத்து நிறுத்தப்பட வேண்டும்.

இதுபோன்ற அடக்குமுறைகள் ஏனைய எந்தவொரு படைப்பாளிகளுக்கும் இடம்பெறக்கூடாது. அப்படியானால் விரைந்து ஸ்ரீலங்காவுக்கு எதிராக பன்னாட்டு சமூகம் அனைத்துக் குற்றங்களுக்கும் எதிராக விசாரணைகளை ஆரம்பிக்க வேண்டும் என்பதை இத் தருணத்தில் வலியுறுத்தி நிற்கின்றோம்...” என்று அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஜனாதிபதி தேர்தலில் மும்முனைப்போட்டி

## "ரணிலை பயன்படுத்தி ராஜபக்ஷக்களும், ராஜபக்ஷக்களைப் பயன்படுத்தி ரணிலும் அதிகாரத்தை தக்கவைப்பதற்கு தீவிர முயற்சி"




**தந்திரீகன்**

சிறிலங்காவின் ஜனாதிபதி தேர்தல் எதிர்வரும் செப்டெம்பர் 17ஆம் திகதிக்கும், ஒக்டோபர் 17ஆம் திகதிக்கும் இடையில் நடைபெறவிருப்பதாக தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

அரசியலமைப்பின் பிரகாரம் ஜனாதிபதி பதவிக்காலத்தினை வரையறை செய்து இந்த அறிவிப்பை தேர்தல்கள் ஆணைக்குழு வெளியிட்டுள்ளது. கூடவே, தேர்தலை நடத்துவதற்கான பத்து மில்லின் நிதியையும் பெற்றுக் கொள்வதில் தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு நம்பிக்கை ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாகவே தேர்தல்கள் ஆணைக்குழு 2024ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பட்டியலை தயாரிக்கும் செயற்பாட்டை வேளையோடே ஆரம்பித்துள்ளது. அந்தப் பட்டியலுக்கு அமைவாக, புதிய வாக்காளர்கள் எட்டு இலட்சம் பேரையும் உள்ளீர்த்து ஜனாதிபதி தேர்தலை நடத்துவதற்கான தயார்ப்படுத்தலில் தேர்தல்கள் ஆணைக்குழு தீவிரமாக ஈடுபட்டுள்ளது.

தேர்தல்களை அறிவிக்கும், நடத்தும் அதிகாரத்தினைக் கொண்டிருக்கும் தேர்தல்கள் ஆணைக்குழு இத்தகைய நடவடிக்கைகளை முன்னெடுத்துக்கொண்டிருக்கையில், அரசியல் கட்சிகள் முதலில் ஜனாதிபதி தேர்தல் நடைபெறுமா இல்லை நாடாளுமன்றத் தேர்தல் நடைபெறுமா என்று பட்டிமன்றம் நடத்திக் கொண்டிருக்கின்றார்கள்.

இந்த விவகாரம் வெறுமனே அரசியல் கட்சிகளை மட்டுமல்ல தென்னிலங்கையில் அடுத்து அதிகாரத்துக்கு வரவுள்ள தரப்புக்களிடையேயும் முரண்பாடுகளை தோற்றுவித்துள்ளது. குறிப்பாக, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் அவரை ஆட்சிபீடத்தில் வைத்து அழகுபார்க்கும் ராஜபக்ஷக்களுக்கும் இடையில் முரண்பாடுகளை தோற்றுவித்துள்ளது.

பொதுஜனபெரமுவின் ஸ்தாபகத் தலைவர் பஷில் ராஜபக்ஷ மீண்டும் சிறிலங்கா திரும்பியதுக்கு பின்னர் மூன்று தடவைகள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்துள்ளார்.

இந்தச் சந்திப்புக்கள் அனைத்தும் தேர்தலை மையப்படுத்தியதாகவே உள்ளன. அதாவது முதலில் எந்தத் தேர்தலை நடத்துவது என்பது பற்றியே அமைந்துள்ளன.

ஆனால் இருவருக்கும் இடையிலான சந்திப்பில் எந்தவிதமான இணக்கப்பாடுகளும் எட்டப்படவில்லை. குறிப்பாக மேற்படி சந்திப்புக்கள் இரண்டில் மஹிந்த ராஜபக்ஷவும் கலந்து கொண்டாலும் ரணிலுடன் இணக்கப்பாடுகளை எட்ட முடிந்திருக்கவில்லை.

ராஜபக்ஷக்களைப் பொறுத்தவரையில் தற்போதும் ரணிலை ஆட்சியில் தக்கவைப்பதற்கான நாடாளுமன்ற பெரும்பான்மை பலத்தினைக் கொண்டிருக்கின்றார்கள். அந்த வகையில் ராஜபக்ஷக்கள் முதலில் நாடாளுமன்ற தேர்தலை நடத்த வேண்டும் என்று ரணில் விக்கிரமசிங்கவுக்கு அழுத்தங்களைப் பிரயோகிக்கின்றார்கள்.

இதற்கு வெகுவான காரணங்கள் உள்ளன. முதலாவது, பொதுஜனபெரமுனவையும், ராஜபக்ஷக்களின் வாரிசு அரசியலையும் பாதுகாப்பதாக இருந்தால் நாடாளுமன்ற தேர்தல் அவர்களுக்கு முக்கியமாகின்றது.

அதாவது, பொதுஜனபெரமுவில் ஏலவே போட்டியிட்டு தற்போது நாடாளுமன்றத்தில் உள்ளவர்கள் தற்போது ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிக்கும் நிலைப்பாட்டினை எடுத்திருந்தாலும், நாடாளுமன்றத் தேர்தல் நடத்தப்படுமாக இருந்தால் அவர்கள் போட்டியிடுவதற்கு மீண்டும் பொதுஜனபெரமுனவே ஆசன ஒதுக்கீட்டைச் செய்யும்.

ஐக்கிய தேசியக் கட்சியால் பொதுஜன பெரனவில் உள்ளவர்களை அழைத்து திடீரென ஆசன ஒதுக்கீடுகளைச்செய்ய முடியாது. அந்தக் கட்சியில் ஏலவே மாவட்ட ரீதியாக களமிறங்குவதற்கான பட்டியல் தயாராகவே உள்ளது.

அந்த வகையில், நாடாளுமன்ற தேர்தல் நடத்தப்பட்டால் பொதுஜன பெரமுன மீண்டும் ஏனைய கட்சிகளை விடவும் அதிகமான ஆசனங்களை கைப்பற்றுகின்ற போது, அதனை முன்னலைப்படுத்தி நாடாளுமன்ற ஆட்சியைத் தக்கவைத்துக்கொள்ள முடியும் என்று ராஜபக்ஷக்கள் கருதுகின்றனர்.

அதுமட்டுமல்ல, கடந்த காலத்தினைப்போன்று 134 உறுப்பினர்கள் கட்சிக்கு கிடைக்காது விட்டாலும், கிடைக்கின்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையானது ஏனையவற்றை விடவும் அதிகமாகக் காணப்படுவதால் கட்சியின் எதிர்காலம் உறுதியாகின்றது.

அதன்மூலமாக ராஜபக்ஷக்களின் வாரிசு அரசியலை உறுதி செய்து கொள்ள முடியும். தற்போதைய நிலையில் பொதுஜனபெரமுவின் தேசிய அமைப்பாளராக நாமல் ராஜபக்ஷ நியமிக்கப்பட்டுள்ளார். அவருக்கு துணையாக மஹிந்தவும், பஷிலும் இருக்கின்றார்கள். அதேபோன்று சமலும், அவருடைய புதல்வர் சஷீந்திரவும் உள்ளார். இதனைவிடவும் ராஜபக்ஷவின் சகோதரியின் புதல்வர் நிபுண ரணவக்கவும் உள்ளார்.

ஆகவே ராஜபக்ஷக்கள் கட்சியை தமது வாரிசுகளான இளையவர்களிடத்தில் ஒப்படைத்துவிட்டு அவர்களுக்கான எதிர்கால களத்தினையும திறந்து விடமுடியும் என்றும் நம்புகின்றனர்.

அதுமட்டுமன்றி, பொதுத்தேர்தலில் பொதுஜனபெரமுன ஆதிக்கம் செலுத்தும் பட்சத்தில் அடுத்து ஜனாதிபதி தேர்தலில் தமது சார்பில் ஒருவரைக் களமிறக்கி வெற்றியைப் பெற்றுக்கொள்ள முடியும் என்றும் ராஜபக்ஷக்களின் கணக்காக உள்ளது.

குறிப்பாக, ராஜபக்ஷ குடும்பத்தில் ஒருவரையே நேரடியாக களமிறக்குவதன் ஊடாக அதிகாரத்தினை தக்கவைத்துக் கொள்ள முடியும் என்பதோடு, ராஜபக்ஷக்களையே மக்கள் விரும்புக்கின்றார்கள் என்ற செய்தியையும் உலகத்துக்கு அனுப்ப முடியும் என்றும் கணக்குப் போடுகின்றார்கள். குறிப்பாக, ஏழுமூளைகளைக் கொண்டவர் என்று ராஜபக்ஷ முகாம் வெகுவாகப் புகழும் அரசியல் சாணக்கியன் பஷில் இந்த தந்திரத்தினை ரணில் விக்கிரமசிங்க நன்றாகவே புரிந்து வைத்துள்ளார். ஏனென்றால் அரசியலில் அவரும் 'நரி' அல்லவா?

ராஜபக்ஷக்களையும், அவர்களின் கட்சியையும் பலவீனமாக்க வேண்டுமாக இருந்தால் முதலில் நாடாளுமன்றத் தேர்தலை நடத்தினால் மீண்டும் ஜனாதிபதியாக தொடரும் தனது கனவு பலிக்காது என்பதில் ரணில் உறுதியாக இருக்கின்றார்.

அத்துடன், அமைச்சரவையில் உள்ள அமைச்சர்கள், மற்றும் இராஜாங்க அமைச்சர்களில் நால்வரைத் தவிர ஏனையவர்கள் தன்னுடன் இருப்பார்கள் என்று ரணில் நம்பிக்கை கொண்டுள்ளார்.

அதேநேரம், நிமல் லன்சா தலைமையில் உருவாகிவரும் கூட்டணியும் ரணில் விக்கிரமசிங்கவையே ஆதரிப்பதற்கான அறிவிப்பை வெளியிட்டுள்ளது. இதனைவிடவும், வடக்கு,கிழக்கில் டக்ளஸ், பிள்ளையான், வியாழேந்திரன், அங்கஜன், திலீபன், மஸ்தான், மு.காவின் ஹரீஸ், பைசல் காசிம், அகில இலங்கை மக்கள் காங்கிரஸின், இஷாக் ரஹ்மான், முஷாரப் உள்ளிட்டவர்கள் ரணிலை ஆதரிப்பதற்கு தயாராகி விட்டார்கள்.

இதனைவிடவும், இலங்கை தொழிலாளர் காங்கரஸ் அணியினரும், ஐக்கிய மக்கள் சக்தியில் இருந்து வெளியேறுவதற்கு தயாராக இருக்கும் சரத்பொன்சேகா, ராஜித, தலாதா அத்துக்கோரள உள்ளிட்டவர்களும் இன்னும் சிலரும் ரணிலையே ஆதரிக்கப்போகின்றார்கள்.

மேலும், சுதந்திரக்கட்சி நீதிமன்றத்தில் சிக்கல்களைத் தீர்த்துக்கொள்வதற்கு எத்தனை ஆண்டுகள் செல்லும் என்பது தெரியாதுள்ள நிலையில் சந்திரிகாவின் தலைமையிலான குமரவெல்கம மற்றும் நிமல் சிறிபால டிசில்வா, துமிந்த திஸாநாயக்க, மஹிந்த அமரவீர, லசந்த அழகிய வண்ண, சம்பிக்க ரணவக்க உள்ளிட்டவர்களும் ரணிலுடன் சங்கமிப்பதற்கே சிந்திக்கின்றார்கள்.

இவ்வாறு துகள்களாக உள்ள அணிகளை ஒருங்கிணைத்து ஜனாதிபதி தேர்தலில் தனது வெற்றியை உறுதி செய்துகொள்ள முடியும் என்று ரணில் கருதுகின்றார். ஆனால், ரணில் விக்கிரமசிங்க ராஜபக்ஷ முகாமில் இருப்பதை பயன்படுத்தியும், மனோகணேசன், ரவூப் ஹக்கீம், ரிஷாத் பதியூதீன், சுமந்திரன், சாணக்கியன் ஆகியோர் தன்னுடனே தற்போது வரையில் இருப்பதால் அதிகாரத்தினை தன்னால் இலகுவாக கைப்பற்றி விடமுடியும் என்று சஜித் பிரேமதாச கருதுகின்றார்.

அத்தோடு, இதுவரையில் ஏழுக்கும் அதிகமாக முன்னாள் படை அதிகாரிகளை தன்வசம் ஈர்த்துக்கொண்டுள்ளமையால், முப்படையினரின் செல்வாக்கும் தமக்கே கிட்டும் என்றும், பௌத்த தேரர்களின் ஆதாரவும் தமக்கு கிடைக்கும் என்றும் அவர் நம்பிக்கை கொண்டுள்ளார்.

அதேநேரம், அரகலய மக்கள் எழுச்சிப்போராட்டத்தின் பின்னர் மக்கள் முழுமையான மாற்றத்தினை விரும்புகின்றார்கள். குறிப்பாக 24சதவீதத்துக்கும் அதிகமானவர்கள் இன்னமும் ஜனாதிபதி தேர்தலில் யாரை ஆதரிப்பது என்று தீர்மானிக்கவில்லையென ஆய்வுகள் கூறுகின்றன. அதேநேரம் எட்டு இலட்சம் புதிய வாக்காளர்களும் உள்ளார்கள்.

ஆகவே மேற்படியான தரப்பினரை ஒருங்கிணைத்து ஆட்சிப்பீடத்தில் ஏறிவிடலாம் என்று தேசிய மக்கள் சக்தி என்ற பெயர் பலகையுடன் நடமாடும் ஜே.வி.பி. கருதுகின்றது.

குறிப்பாக, வடக்கு,கிழக்கு பிரதிநிதிகளுடன் பேச்சுக்களை நடத்தவதையும் பார்க்கையில் தாமே நேரடியாக ஒருங்கிணைப்பாளர்களை நியமித்து விடயங்களை கையாண்டு விட முடியும் என்ற புதிய வியூகத்தையும் வகுத்துள்ளது ஜே.வி.பி.

அதேபோன்று தான் மலையக மக்கள் விடயத்திலும், முஸ்லிம் தரப்பு விடயத்திலும் ஜே.வி.பி. கருதுகின்றது. எந்தவொரு சிறுபான்மை கட்சிகளுடனும் பேரம்பேசுவதற்கு தயாரில்லாது நேரடியாகவே களத்தில் இறங்கியுள்ளது அக்கட்சி.

அதன்விளைவுகள் எவ்வாறு இருக்கும் என்பது தற்போது நடைபெறும் மக்கள் சந்திப்புக்களில் திரளும் மக்கள் எண்ணிக்கையை வைத்துக் கூற முடியாது விட்டாலும், நாடாளவிய ரீதியில் ஜே.வி.பி தொடர்பில் புதிய பார்வையொன்று மக்கள் மத்தியில் எழுந்திருக்கின்றமையை நிராகரிக்க முடியாதுள்ளது.

ஆனால், அந்த மாற்றம் ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமாரவை ஜனாதிபதி அரசியாசனத்தில் வைக்குமா என்பது தொடர்பில் பலத்த கேள்விகள் உள்ளன. காரணம், சிறிலங்காவின் தேர்தல்களில் செல்வாக்குச் செலுத்தும் பெருவர்த்தகர்கள் ஒருபோதும் ஜே.வி.பியை விரும்பமாட்டார்கள். ஆகவே அவர்கள் நிச்சயமாக ஜே.வி.பியின் தோல்விக்காகவே உழைப்பார்கள்.

எவ்வாறாயினும், ஜே.வி.பிக்கு நாடாளுமன்றத்தேர்தலில் வழமைக்கு மாறாக உறுப்பினர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் உள்ளன. இதுவும் ஆட்சியில் உள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முதலில் நாடாளுமன்றத் தேர்தலை நடத்தாமைக்கு கொரு காரணமாக உள்ளது.


அதேபோன்று, முதலாளித்துவ தலைவர்களான மஹிந்த, ரணில், சந்திரிகா போன்றவர்களும் கைகோர்ப்பதற்கு வாய்ப்புக்கள் உள்ளன. இறுதி நேரத்தில் சஜித்தும் இந்த அணியில் கைகோர்த்தாலும் ஆச்சரியத்துக்கு இடமில்லை.

எவ்வாறாயினும், தற்போதைய சூழலில் தென்னிலங்கையில் வழமைக்கு மாறாக மும்முனைப்போட்டியொன்று ஏற்பட்டுள்ளது. இந்தப்போட்டியால் எந்தவொரு வேட்பாளரும் பெரும்பான்மையை பெறமுடியாத நிலைமை ஏற்படும் என்றொரு பார்வையும் உள்ளது.

அந்தப் பார்வைகாரணமாக, தற்போது வரையில் ரணிலா, சஜித்தா, அநுரவா வெற்றி பெறுவார்கள் என்று உறுதியாக கூற முடியாத நிலைமைகள் ஏற்பட்டுள்ள. ஆய்வாளர்களும், அனுமானர்களும் தலையைப் பிய்க்கும் அளவிற்கு நிலைமைகள் உள்ளன. அதேபோன்று தான் இராஜதந்திரிகளும் கூட தடுமாறிப்போயுள்ளனர். இதனால் அவர்கள் எந்த அணியுடன் பணியாற்றுவது என்பதில் திண்டாடி வருகின்றனர்.

ஈழநாடு






# நூற்றாண்டுகால காத்திருப்பும் வாழ்நாள் பெருந்தவமும்

**என் ஆண்டவரின் தாய் என்னிடம் வர நான் யார்...**
**(லூக்கா 1: 39-45)**

ஜெமில் (கட்டைக்காடு)

மருதமடு அன்னைக்கு முடி சூட்டப்பட்ட வரலாற்று சிறப்பு மிக்க நாளின்; நூற்றாண்டு விழாவை நினைவுகூறும் வகையில் மன்னார் மறைமாவட்ட பங்குகளிற்கும் யாழ்ப்பாண மறைமாவட்ட பங்குகளிற்கும் அன்னையின் திருச்சொரூபம் பவணியாக எடுத்துச் செல்லப்படுவதை நாம் அனைவரும் அறிவோம்.

1924ம் ஆண்டு ஆடித்திங்கள் பரிசுத்த பாப்பரசர் 11ம் பத்தி நாதரின் பிரதிநிதியாக கொழும்புக்கு வருகைதந்த அதி.வண. ஆண்டகை ஆஷா குடேற்இ அவர்கள் மாதாவின் சிரசிலும்இ கரங்களில் ஏந்தியிருந்த தேவபாலனின் சிரசிலும்இ வைரகற்கள் பதிந்த இருதங்க முடிகளையும் சூட்டினார்.

அவ்வேளையில் திருநாள் திருப்பலியை. முன்னாள் யாழ் ஆயர் அதி.வண கியோமார் ஆண்டகைஇ நிறைவேற்றியதுடன்இ தூத்துக்குடி ஆயர் அதி.வண றோச் ஆண்டகை மக்களைக் கவரும் வகையில் மாதாவின் புதுமைகளைப் பற்றி பிரசங்கித்தார். இந்நிகழ்ச்சிக்கு 150 ஆயிரம் மக்களும்இ 50ற்கும் மேற்பட்ட இலங்கை இந்திய குருக்களும்இ அக்காலத்தில் இருந்த யாழ்இ கொழும்புஇ கண்டிஇ காலிஇ மறைமாவட்ட ஆயர்களும்இ பக்திப் பரவசத்துடன் முடிசூட்டு விழாவில் பங்கு பற்றியதாக சரித்திரம் கூறுகின்றது. இலங்கையிலுள்ள பல தேவாலய மணிகள் ஆர்ப்பரிக்கஇ பீரங்கிகள் முழங்கஇ மருதமடு அன்னையின் கீதங்கள் வானொலியில் ஒலிக்கஇ பல்லாயிரம் மக்களின் கனவு அன்று நனவாகியது.

அதனைத் தொடர்ந்து 2 ஆம் உலகமகா யுத்த காலவேளையில் 1944ம் ஆண்டு ஆவணி 25ல் மருதமடு அன்னையின் தேவாலயம் அபிஷிசேகம் செய்யப்பட்டது.

அமலோற்பவ மரியநாயகி சபைக் குருமார் இலங்கைக்கு வந்து தொண்டாற்றிய நூற்றாண்டு விழாவை கொண்டாடும் முகமாக அதி.வண கியோமோர் ஆண்டகையின் தலைமையின்கீழ் மடு அன்னையின் திருச்சுரூபம் “கன்னிமரியாள் ஓர் பிரசங்கி” என்னும் கருப்பொருளில் யாழ்ப்பாண மேற்றாசனத்தில் உள்ள ஒவ்வொரு விசாரனைப் பங்கிற்கும் கொண்டு செல்லப்பட்டது. இதற்காக ஒவ்வொரு பங்கிலும் இருதினங்கள்இ செபதபங்கள் அனுசரித்தும்இ மக்கள் பயபக்தியுடன் தமது மீசாம்களை அலங்கரித்தும்இ மனம் திருப்புதலுக்கான முயற்சியாக இவ்வருகையை ஆயத்தம் செய்தனர்.



யாழ்ப்பாணத்து மன்னன் சங்கிலியன் காலம் முதல் தன்னிடம் அடைக்கலம் தேடி வருபவர்களை காப்பாற்றி அருள்; நல்கும் வரலாற்று சிறப்பு மிக்க மருதமடு மாதாவின் யாழ் பவனி பங்குனி 15ம் திகதி தொடக்கம் வைகாசி 5ம் திகதி வரை நடந்தேறியது. இந்த 50 நாட்களிலும் சுமார் 80 பங்குகளில் மாதாவின் தரிசனம் கிடைத்ததை கிறீஸ்தவர்களும்இ பிறசமயத்தவர்களும் பெரும் பேறாக கருதினர்.இக்காலப்பகுதியில் சுமார் 51 ஆயிரம் கத்தோலிக்க மக்கள் தங்களை தேவதாயாருக்கு காணிக்கையாக்குவதற்காக பத்திரங்களில் கையொப்பமிட்டு மடு அன்னையின் திருப்பாத கமலங்களில் வைத்ததாக வரலாறுகள் சான்று பகருகின்றது.

பின்னர் உள்நாட்டு போரின் தாங்கங்களினால் மருதமடு அன்னை யின் திருச்சொருப பவனி முன்னரைப் போல் அனைத்துப்பகுதிகளையும் சென்றடையவில்லை. எனினும் உள்நாட்டு போரின் உச்சக்கட்ட காலங்களில் அன்னையிடம் தஞ்சம் புகுந்தவர்களின் உயிர்கள் பாதுகாக்கப்பட்ட வரலாறுகளும் உண்டு.

கடந்த 2003 ஆம் ஆண்டு சமாதானத்தை வேண்டி அப்போதைய மன்னார் ஆயர் மேதகு இராயப்பு யோசப்பு ஆண்டகை அவர்களினால் அணையாதீபம் ஒன்று மருதமடு அன்னையின் பீடத்தில் ஏற்றிவைக்கப்பட்டது.

இந்நிலையில் போரின் வடுக்களையும் கடும் பொருளாதார நெருக்குதல்களையும் சுமந்து மீளாத்துயருடன் இருக்கும் மக்களின் கண்ணீருக்கு நூற்றாண்டு காணும் அன்னையவளின் வருகை மிகப்பெரும் அறுதலையும் ஆன்ம அமைதியையும் சமாதானத்தையும் சமத்துவத்தையும் அளித்துள்ளது என்றே கூறமுடியும்.

மருதமடு அன்னையின் திருச்சொருபவம் பவனிவரும் வீதிகள் எங்களும் இன மத மொழி பேதமின்றி ஒன்று சேர்ந்து அலங்கரிக்கப்பட்டு மிக சிறப்பாக வரவேற்கப்படுகிறது. அது மட்டுமல்லாது பங்குகள் அனைத்திலும் மக்கள் ஒன்று திரண்டு அன்னையை வழிபடுவதுடன் அவரின் ஆசிகளையும் பெறுகின்றார்கள்.

அன்னையின் இந்த வருகை இலங்கைத் தீவுக்குள் ஒரு நிரந்தர அமைதியை மக்களிடையே வழங்குவதாக அமைய இந்த கட்டுரை வாயிலாக நானும் வேண்டி நிற்கின்றேன்.

# பிரித்தானிய பொதுத்தேர்தல் நடக்கப்போவது என்ன?




பூலோகன்

உலக வரலாற்றில் முன்னெப்போதும் இல்லாத வகையில் நாற்பதுக்கும் மேற்பட்ட நாடுகள் 2024ம் ஆண்டில் பொதுத் தேர்தலைச் சந்திக்கின்றன. நாற்பதுக்கும் மேற்பட்ட நாடுகள் தேர்தல் களம் காண்கின்றன என்ற போதும், அவையனைத்துமே ஜனநாயகம் காக்கப் புறப்பட்டவை அல்ல. சில நாடுகளின் தேர்தல்கள் மட்டுமே மக்களாட்சிக்கானது. இதர நாடுகளின் தேர்தல்கள் கண்துடைப்புக்கானது.

அந்த வகையில் உலகின் மிகப்பெரும் நாடுகளான அமெரிக்கா மற்றும் பிரித்தானியா ஆகிய நாடுகளின் தேர்தல்களும் எதிர்பார்ப்புக்குரியவை. அதிலும் உலகின் பெரியண்ணனாக பாவிக்கப்படும் அமெரிக்காவின் தேர்தல், சர்வதேசளவில் கவனம் பெறுபவை.

ஜனநாயக கட்சியை பொறுத்தளவில் ஜோ பைடன் மீண்டும் போட்டியிடுவதை உறுதி செய்திருக்கிறார். குடியரசுக் கட்சி தரப்பில் டிரம்ப் நிற்பதை நீதிமன்றம் கேள்விக்குள்ளாக்கி இருக்கிறது. எனினும் அவர் களமிறங்குவது ஈற்றில் உறுதியாகியுள்ளது. ஆகவே பைடனுடன் மீண்டும் ஒருதடவை ட்ரம்ப களம்; காண்கிறார்.

இவ்வாறான நிலையில் உலகத்தையே ஆட்சி செய்த பிரித்தானியாவின் தேர்தல் இந்த ஆண்டின் இரண்டாம் அரையாண்டில் நடத்தப்படவுள்ளதாக பிரதமர் ரிஷி சுனக், அறிவித்துள்ளார்.

அவரது கட்சியின் முந்தைய பிரதமர்களான போரிஸ் ஜோன்சன், லிஸ் ட்ரஸ் வரிசையில் சிரமத்தில் தவிக்கிறார். உக்ரேன், காசா என இருபெரும் போர்க்களங்கள், புவிசார் அரசியல் மற்றும் பொருளாதார முடிவுகளால் பிரித்தானியாவின் தேர்தல் முடிவுகளை நேரடியாக பாதிக்கக்கூடியவை.

அந்த வகையில், பிரித்தானியாவின் லண்டனில் கடந்த ஆண்டு ஜூலை மாதம் மூன்று தொகுதிகளுக்கான இடைத்தேர்தல் நடைபெற்றிருந்தது. குறித்த தேர்தலில் ஆளும் கன்சர்வேடிவ் கட்சி முன்னாள் பிரதமர் போரிஸ் ஜோன்சனின் பழைய தொகுதியை வெற்றிபெற்று தக்கவைத்துக்கொண்டது.

இரண்டு தொகுதிகளை வெற்றி கொண்ட தொழிற்கட்சிக்கு குறித்த தொகுதியை வெற்றிபெறாமையானது ஒரு பின்னடைவு என்று கூறப்பட்டாலும், கன்சர்வேடிவ் கட்சி 500க்கும் குறைந்த வாக்கு வித்தியாசத்தில்தான் அந்தத் தொகுதியை தக்க வைத்துள்ளது.

குறித்த தொகுதியும் கைவிட்டுப்போயிருந்தால், கடந்த 50 ஆண்டு காலத்தில் ஒரேநேரத்தில் நடந்த இடைத்தேர்தலில் மூன்று தொகுதிகளிலும் தோற்றுப்போன முதல் பிரதமர் என்ற பெயர் சுனக்கிற்கு ஏற்பட்டு இருக்கும். எனினும் இடைத்தேர்தலில் ஒரேயொரு வெற்றி மூலம் ஓரளவுக்குத் தப்பி இருக்கிறார்.

அவ்வாறான நிலையில் பொதுத் தேர்தலுக்கு முன்னதாக மேற்படி இடைத்தேர்தல் ஒருமுன்னோடியாக கருதப்பட்டது. அதில் தொழிற்கட்சி ஆதிக்கம் செலுத்தியுள்ளது. இவ்வாறான நிலையில், தற்போதைய கருத்துக்கணிப்புக்கள் சுனக் அரசாங்கத்திற்கு அதிர்ச்சியை ஏற்படுத்துபவையாக உள்ளன.

பிரித்தானியாவில் இவ்வாண்டு இறுதியில் பொதுத் தேர்தல் நடைபெறுமென எதிர்பார்க்கப்படுகிறது. இத்தேர்தலில் யாருக்கு வெற்றி வாய்ப்பு, என்பது குறித்து 'பெஸ்ட் ஒப் பிரிட்டன்' நடத்திய கருத்துக் கணிப்பு முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

அதனடிப்படையில், தற்போது தேர்தல் நடத்தப்பட்டால், ரிஷி சுனக்கின் கன்சர்வேட்டிவ் கட்சி நாடு முழுவதும் 250உறுப்பினர்களை இழக்க நேரிடுமென கூறப்படுகின்றது. ஆளும் கன்சர்வேடிவ் கட்சியைவிட, 19 புள்ளிகள் முன்னிலையுடன் எதிர்க்கட்சியான தொழிலாளர் கட்சி 45 சதவீத வாக்குகளை கணிப்பில் பெற்றுள்ளது. எதிர்கட்;சியான தொழிலாளர் கட்சி 468 இடங்களை பெற்று வெற்றி பெறும் என்றும் அந்த கருத்துக் கணிப்பு முடிவுகள் சுட்டிக்காட்டியுள்ளன.

இதேவேளை. தற்போதைய அமைச்சரவையில் உள்ள 28 பேர் மீண்டும் தேர்தலில் போட்டியிடுவார்கள் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. அவ்வாறு போட்டியிடுவார்களாயின், அவர்களில் 13பேர் மட்டுமே மீண்டும் தெரிவு செய்யப்படுவார்கள் கருத்துக்கணிப்பு முடிவுகள் தெரிவிக்கின்றன.

இதற்கிடையே ஆளும் தரப்புக்கு மற்றொரு அதிர்ச்சி தரும் செய்தியாக இருப்பது என்னவென்றால் தற்போதைய பிரதமர் ரிஷி சுனக் கூட அவரது சொந்த தொகுதியான ரிச்மண்ட் வடக்கு யார்க்ஷயரின் தொகுதியில் வெல்வது கடினம் என்பது தான். இந்த கணிப்பின் படி எதிர்க்கட்சி வரிசையில் இருக்கும் தொழிலாளர் கட்சிக்கு மக்கள் ஆதரவு அதிகமாக இருக்கிறது. தொழிலாளர் கட்சி 45சதவீத வாக்குகளைப் பெறும் எனக்கூறப்பட்டுள்ளது.

அதேநேரம் ஆளும் கன்சர்வேடிவ் கட்சி 26சதவீத வாக்குகளை மட்டுமே பெறும் எனக் கூறப்பட்டுள்ளது. அதாவது கன்சர்வேடிவ்களை விட 19சதவீதத்துக்கும் அதிகமான வாக்குகளைத் தொழிற்கட்சி பெறுமெனக் கூறப்பட்டுள்ளது.

இப்போது எதிர்க்கட்சி வரிசையில் இருக்கும் தொழிலாளர் கட்சி 468 இடங்களில் வெல்ல வாய்ப்பு உள்ளதுடன், ரிஷி சுனக் தலைமையில் தேர்தலை எதிர்கொள்ளப் போகும் கன்சர்வேடிவ் கட்சி வரலாறு காணாத படுதோல்வியைச் சந்திக்க இருக்கிறது.

அவர்கள் 100க்கும் குறைவான இடங்களில் மட்டுமே வெல்ல வாய்ப்பு இருப்பதாக இன்னோர் கருத்துக் கணிப்பில் கூறப்பட்டுள்ளது.

> **"கருத்துக்கணிப்புக்களில் அதிர்ச்சியூட்டும் முடிவுகள் வெளியாகியுள்ளன. அவை நடைமுறையிலும் யதார்த்தமாகின்றபோது பிரித்தானியா புதிய மாற்றங்களை சந்திக்கவுள்ளது"**

அந்த கருத்துக் கணிப்பில், இப்போது தேர்தல் நடத்தப்பட்டால், சுனக்கின் கன்சர்வேடிவ் கட்சி நாடு முழுவதும் மிக மோசமான தோல்வியை அடையும். தொழிலாளர் கட்சி 468இடங்களைப் பெற்று வெற்றி பெறும் ஒரு பொதுத் தேர்தலில் கன்சர்வேடிவ் கட்சி இதுவரை இப்படியொரு தோல்வியைச் சந்தித்ததே இல்லை.

அத்துடன் கன்சர்வேடிவ் கட்சியின் மோசமான நிலை அத்துடன் நிற்கவில்லை. பிரதமராக உள்ள ரிஷி சுனக்கின் ரிச்மண்ட் தொகுதியில் கூட போட்டி மிகமிக நெருக்கமாக இருக்கிறது. அங்கே தொழிலாளர் கட்சி ரிஷி சுனக்கை விட வெறும் 2.4 சதவீதம் தான் பின்தங்கிய இருக்கிறது. எனவே, அங்கே எப்போது வேண்டுமானாலும் நிலைமை மாறலாம் எனக்கூறப்படுகிறது.

இன்னோர் கருத்துக் கணிப்பு அமைப்பான 'யூகோவ் நிறுவன்' ஆய்வின் முடிவுகளின்படி, மொத்தமுள்ள 650இடங்களில் 403 இடங்களை கைப்பற்றி தொழிலாளர் கட்சி சாதனை படைக்கவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. 18,000 பேரிடம் எடுக்கப்பட்ட கருத்துக் கணிப்பின்படி, ரிஷி சுனக் தலைமையிலான கன்சர்வேட்டிவ் கட்சி 155இடங்களில் மட்டுமே வெற்றிபெறும் கூறப்பட்டுள்ளது.

அத்துடன் கீழவையில் கன்சர்வேட்டிவ் குழு தலைவராக பதவி வகித்து வரும் பென்னி மோர்டான்ட், முன்னாள் அமைச்சர் ஜேக்கப் ரீஸ் மோக் ஆகியோரும் தோல்வி அடைய வாய்ப்புள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக, கடந்த 2019ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் நடைபெற்ற தேர்தலில், ஆளும் கன்சர்வேட்டிவ் கட்சி 365இடங்களில் வெற்றிபெற்;று ஆட்சியை பிடித்தது.பிரித்தானியா பாராளுமன்ற கீழவையான ஹவுஸ் ஒப் கொமன்ஸ் 650 உறுப்பினர்களை கொண்டது. அங்கு ஆட்சி அமைப்பதற்கு 326 இடங்களில் வெற்றிபெற வேண்டும். அதனை தன தாக்கிய கன்சர்வேட்டிவ் ஆட்சியை அமைத்தது.

ஆட்சியை அமைத்தாலும் பல சர்ச்சைகள் தோன்றின. குறிப்பாக குறுகிய காலத்தில் சர்ச்சைகளில் சிக்கி மூன்று பிரதமர்கள் இராஜினாமாச் செய்யும் நிலைக்கு கன்சர்வேட்டிவ் கட்சி சென்றது. பாலியல் வழக்கில் சிக்கியவரை அரசாங்கத்தில் நியமித்தமை, கொரோனா விதிகளை மீறியமை என்று போரிஸ் ஜோன்சனுக்கு எதிராக புகார்கள் எழுந்த நிலையில், அவர் தனது பிரதமர் பதவியை இராஜினாமா செய்தார்.

போரிஸை தொடர்ந்து பிரதமர் பதவிக்கு வந்த லிஸ் டிரஸ், பொருளாதார நெருக்கடி காரணமாக பதவியேற்ற 6 வாரங்களிலேயே பதவி விலகினார். இதையடுத்து, கடந்த 2022ஆம் ஆண்டு, பிரதமராக பொறுப்பேற்ற ரிஷி சுனக் பல சவால்களை கடந்து அந்த பதவியில் தொடர்ந்து வருகிறார்.

அவர்பதவியில்தொடர்ந்துவந்தாலும் அவரது கட்சியை அடுத்த பொதுத் தேர்த லில் நிலைநிறுத்துவதென்பது அவருக்கு மிகச் சவாலான விடயமாக மாறியுள்ளது.

தற்போதைய நிலையில் பிரித்தானியாவில் ஏற்பட்டுள்ள பணவீக்கம் மற்றும் பொருளாதார நெருக்கடிகள் அவரது அரசியல் நகர்வுகளுக்கு பெருந் தடையாக இருக்கின்றன. அதிலிருந்து மீள்வதொன்றும் மிக இலகுவான காரியமல்ல.

ஆகவே பொதுத்தேர்தலுக்கு முன்னதாக மாயவித்தைகளைச் செய்து பிரித்தானிய மக்களின் மனதை மாற்றும் ஆற்றல் சுனக்கிற்கு இருக்கின்றதா என்பது தான் தற்போதுள்ள பெரும் கேள்வியாகும்.

# பிரித்தானிய தேர்தலில் ஆளும் கட்சியுடன் கைகோர்த்துள்ள தமிழ் இளையோர்

## நிபந்தனைகளின் அடிப்படையில் ஆதரவு

*சுகிர்தன்*

நடப்பாண்டான 2024 இல் உலகளாவிய ரீதியில் பல நாடுகள் பொதுத்தேர்தலை எதிர்நோக்குகின்றன. இதில்; அமெரிக்காவின் தேர்தலுக்கு நிகரான நிலையில் பிரித்தானியாவின் பொதுத்தேர்தலும் பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

இவ்வாண்டின் இரண்டாம் அரையாண்டில் தேர்தல் நடைபெறுமென பிரித்தானியப் பிரிதமர் ரிஷி சுனக், அறிவித்துள்ளார். உக்ரேன், காசா மற்றும் நாட்டின் பொருளாதாரம் ஆகியன நடக்கவிருக்கும் தேர்தலை நேரடியாகவே தீர்மானிக்கும் சக்திகளாக உருப்பெற்றுள்ள நிலையில் ஆளும் கட்சியான கன்சர்வேடிவ் கட்சியும் பிரதான எதிர்க்கட்சியான தொழிலாளர் கட்சியும் பெரும் முனைப்புடன் தேர்தலை எதிர்கொள்ள செயற்பட்டுக் கொண்டிருக்கின்றன.

பிரித்தானியாவின் இந்தத் தேர்தலில் புலம் பெயர் தமிழர்களும்; வாக்குகளின் எண்ணிக்கையில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தும் சக்திகளாக உள்ளனர் என்பது மறுப்பதுக்கில்லை.


இந்நிலையிலேயே இந்த சர்ந்தப்பத்தினைப்பயன்படுத்தி தமிழினப்படுகொலைக்கு நீதியும் தமிழீழ கொள்கைக்கு ஆதரவும் வழங்கவேண்டுமென்ற நிபந்தனையின் அடிப்படையில் தமிழ் செயற்பாட்டாளர்கள் பலர் பிரித்தானிய பாராளுமன்ற உறுப்பினர்களின் தேர்தல் பிரச்சாரங்களில் கைகோர்த்துள்ளனர்.

சிறிலங்காவில் நடைபெற்றது இனப்படுகொலை என்பதை பிரித்தானியா ஏற்றுக்கொண்டு நீதி வழங்குவதோடு இராணுவத்தளபதி சவேந்திர சில்வா உள்ளிட்ட யுத்தக்குற்றவாளிகளுக்கு எதிராக பிரித்தானியா தடை விதிக்க வேண்டும் என்றும் தமிழர்களின் தனிநாட்டு தமிழீழ கோரிக்கைக்கு ஆதரவு வழங்க வேண்டும் என்ற நிபந்தனையின் அடிப்படையில் ஆளும் கன்சர்வேடிவ் கட்சியுடன் இணைந்து தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ளனர்.


அந்தவகையில், கன்சர்வேடிவ் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களான லுயி பிரஞ்சு (Louie French MP) இயன் பைரன் எம்.பி. (Hon.Ian Byrne MP) பொப் பிளக்மன் (Hon.Bob Blackman CBE MP) , டான் ரசூல் (Hon. Dean Russell MP), ஸ்டீவ் ரக்வெல் (Hon.Steve Tuckwll MP) மற்றும் கவுன்சிலர்களான ஜோன் கோப் (John Cope) ஆகியோரின் தேர்தல் பிரச்சாரங்களில் இதுவரையில் தமிழ் இளையோர் செயலாற்றியுள்ளனர்.










இந்நிலையில் இந்த தேர்தல் பிரச்சாரத்தில் கலந்து கொண்டவர்களில் சிலர் நமது ஈழநாட்டிற்கு அளித்த விசேட நேர்காணல் பின்வருமாறு;

### மரியநாயகம் வேதநாயகம்



ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கையின் பொறுப்புக்கூறல் தொடர்பில் பிரேரணையை முன்வைத்து அதனை செயற்படுத்த தொடர்ந்தும் இலங்கைக்கு பிரித்தானியா அழுத்தம் கொடுத்து வரும் நிலையில் பிரித்தானியாவின் ஆளும் கட்சி தொடர்ந்தும் ஆட்சியில் இருப்பது தமிழர்களைப் பொறுத்தவரையில் அவசியமானதொன்றே. அதனாலேயே தமிழினத்தின் விடியலுக்காக பிரித்தானியா உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென வலியுத்தி இந்த தேர்தல் பிரச்சாரத்தில் நான் பங்கெடுத்துள்ளேன்.

### ரமணன் சிவலிங்கம்



இலங்கையின் யுத்தக்குற்றவாளிகளான இராணுவத்தளபதி; சவேந்திர சில்வா உள்ளிட்ட பலர் தண்டிக்கப்படவேண்டியவர்களே. எனவே அவர்களுக்கு எதிராக கனடா நாடு தடை விதித்தது போல் பிரித்தானியாவும் தடைவிதிக்க முன்வர வேண்டும். அதற்கான அழுத்தங்களை ஆளும் கட்சி எம்.பி.க்களே உரிய வகையில் வழங்க முடியும். அதனாலேயே நான் இந்த தேர்தல் பிரச்சாரத்தில் அவர்கள் எமது நிபந்தனையை ஏற்றுக்கொண்டதன் அடிப்படையில் கலந்து கொண்டு துண்டு பிரசுரங்களை வழங்கி வருகிறேன். இது எனது தமிழினத்திற்காகா நான் செய்யும் ஒரு சிறிய பணியாக திருப்தியடைகிறேன்.

### ஈஸ்வரன் டறோஷன்



பிரித்தானிய தேர்தலில் தற்போதைய ஆளும் கட்.சியினரே மீண்டும் ஆட்சிக்கு வந்தால் சிறிலங்காவில் நடைபெற்ற இனப்படுகொலைக்கான பொறுப்புக்கூறலை சிறிலங்கா அரசிடம் அழுத்தமாக வலியுறுத்துவதோடு பாதிக்கப்பட்ட தரப்பினருக்கான நீதியையும் பெற்றுத் தரும் என எதிர்பார்க்கின்றேன்.

அதேநேரம் இந்த பிரச்சார பணியில் ஈடுபடுவதன் மூலம் பிரித்தானிய எம்.பி க்களை சந்தித்து அவர்களிடம் எமது இனத்திற்கு நடந்த அநீதிகளை அதன் சாட்சியாக நான் முன்வைக்க முடிகின்றது. இது அவர்களின் மனநிலையில் மாற்றத்தை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கிறேன்.

### துலக்சன் பத்மநாதன்



இலங்கை இராணுவத்தினதும் புலனாய்வாளர்களினதும் கொலை அச்சுறுத் தலினால் உயிரைப் பாதுகாக்க தப்பித்து பிரித்தானியாவில் தஞ்சம் புகுந்துள்ள நான் தமிழர் களுக்கான தனி நாடே எமக்கான நிரந்த சுதந்திரம் என்பதை உணர்ந்து தமிழர்களின் தனி நாட்டு கொள்கைக்கு ஆரதவு வழங்க வேண்டும் என்ற எம் இளையோரின் நிபந்தனையுடனானா பிரச்சாரத்தில் எனது பங்களிப்பையும் வழங்கி வருகின்றேன்.
















நமது ஈழநாட்டின் வாழ்வாதார உதவித்திட்டத்தில் இம்முறை கிளிநொச்சி மாவட்டத்தை சேர்ந்த தெரிவு செய்யப்பட்ட முன்னாள் போராளி குடும்பங்களிற்கும் உலர் உணவுப் பொதிகளும் மற்றும் பாடசாலை மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களும் வழங்கப்பட்டது.

நமது ஈழநாடு உதவித்திட்டத்திடம் கிளிநொச்சி மாவட்ட மாற்றுவலுவுள்ளோர் சங்கம், விடுத்த வேண்டுகோளிற்கிணங்க மனித உரிமைகள் செயற்பாட்டாளர் கீத் குலசேகரத்தின் ஏற்பாட்டில் செயற்பாட்டாளரான செல்வராசா மேனகன் அவர்களின் 50 ஆயிரம் ரூபா நிதிப்பங்களிப்பில் 6 முன்னாள் போராளி குடும்பங்களிற்கு அத்தியவசிய உலருணவுப்பொதிகள் வழங்கப்பட்டது.

அதேவேளை விஸ்வா ரமேஷ் உள்ளிட்ட செயற்பாட்டாளர்களால் பாடசாலை மாணவர்களுக்கு சுழற்சி முறையில் வழங்கப்பட்டு வரும் கற்றல் உபகரணங்களும் வழங்கி வைக்கப்பட்டது.